
Book 7

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்

# வாள் முனையில் இஸ்லாம்...?



மார்ச்
2000
March

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# இறைவனால் அங்கீகரிக்கப்படாத மார்க்கம் (42:21)

இன்றைய இஸ்லாம் எந்தளவுக்கு பாழ்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை கீழ்கண்ட அட்டவணை காட்டுகிறது.

| வரம்புமீறப்பட்ட புதிய கண்டு பிடிப்புகள் | குர் ஆனுடைய கொள்கைகள் |
|---|---|
| 1. ஹதீஸ் மற்றும் சுன்னத் | 6:19,38, 114; 7:1, 2, 3; 12:111; 17:46; 31:6; 45:6; 65:38-47; மற்றும் பல |
| 2. மதத்தை விட்டு வெளியேறியவன், என்று இவர்கள் நினைப்பவர்களை கொல்வது | 2:286; 4:90; 10:99;18:29 88:21, 22 |
| 3. கடுமையான குற்றவியல் சட்டங்கள் | |
| 4. விபசாரம் செய்பவர்களைக் கல்லால் அடித்துக் கொல்வது | 24:2, 4:25 |
| 5. நான்காவது முறை மது அருந்துபவர்களைக் கொல்வது | 2:256; 18:29 |
| 6. தொழாதவர்களைக் கொல்லச் சொல்லும் சட்டம் | 2:256; 18:29 |
| 7. மாதவிடாய் பெண்களை வணக்க வழிபாடுகளிலிருந்து தடுப்பது | 2:222 |
| 8. முஹம்மது நபியின் விருப்பத்திற்கு மாறாக அவரை இணைவைப்பது | |
| a. அவர்தான் பெருமைமிக்க தகுதிகள் கொண்டிருக்கும் தூதர் என்றழைப்பது | 2:285 |
| b. அவர் தவறே செய்யாதவர் எனக் கருதுவது | 4:79; 9:117; 17:73-74; 33:37; 40:66; 66:1 80:1-10; 93:7 |
| c. அவருடைய சமாதியை "புனித பள்ளியாக" ஆக்கியது | 2:149-150 |
| d. பரிந்துரை செய்யும் சக்தி அவருக்கு இருப்பதாக கருதுவது | 2:48, 123, 253; 6:70, 94; 7:53; 10:3; 39:44 43:86; 74:48 |
| e. ஒரு குதிரையில் ஏறி ஒளி வேகத்தில் வானத்திற்குச் சென்றதாகவும் இறைவனுடன் பேசி 50 நேரத் தொழுகைகளை 5 நேரமாக மாற்றி பெற்றுக் கொண்டதாக, ஒரு அறிவுக்கு பொருத்தமற்ற கதையை கண்டு பிடித்தது. (ஒளியின் வேகத்தில் சென்றால் அவர் இது வரையிலும் பால்வெளி மண்டலத்தையே தாண்டியிருக்க முடியாது!) | 17:1; 53:1-18 |
| f. தொழுகையிலும், பாங்கிலும் அவர் பெயரைச் சேர்த்தது. | 20;14; 72:18 |

(தொடர்ச்சி பின் அட்டை)

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி


செய்தி 1

மார்ச் 2000
நினைவு 2


குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்



தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


## இதழின் உள்ளே


- ★ இறுதிநாளின் அறிகுறிகள்
- ★ இஸ்லாத்தின் முதல் தூண்
- ★ ஹதீஸ்களின் உண்மை நிலை
- ★ குர்ஆன் வழியில் நம் தொடர்புத் தொழுகை
- ★ தூதர்களிடையே வேற்றுமை
- ★ இறைவனின் முத்திரை 19
- ★ நேருக்கு நேர்
- ★ வாள்முனையில் இஸ்லாம் பரவியதா?

# இறுதி நாளின் அடையாளங்கள்

அல்குர்ஆனின் ஆல இம்ரான் அத்தியாயத்தின் 81வது வசனப்படி நம்மிடம் உள்ள குர் ஆனையும், இஸ்லாத்தையும் மெய்ப்பிப்பதற்காக அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட 'ரஸீலுன் முஸத்திக்' ரஷாத் கலீஃபா அவர்களின் பணிகளில் உலக முடிவு நாள் குறித்த தகவல்களை அறிவிப்பதும் ஒன்றாகும். இது குர்ஆனின் அல்ஜின்னு அத்தியாயத் தின் 25 முதல் 28 வரை உள்ள வசனங்களில் நமக்கு அறிவிக்கப்பட் டுள்ளது. இவ்வசனங்களை நம்மிடம் கூறுவது முஹம்மத் நபி என்பதை நாம் இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

72:25 கூறும். உங்களுக்கு வாக்களிக்கப்பட்டிருப்பது விரைவில் நிகழுமா அல்லது என் இரட்சகர் அதைச் சற்று தாமதிப்பாரா என்பதை நான் அறிய மாட்டேன்.

26: அவர்தான் எதிர்காலத்தை அறிந்தவர். அவர் எதிர்காலத்தை யாருக்கும் வெளிப்படுத்தமாட்டார்.

27: தான் தேர்ந்தெடுத்த தூதருக்கு மட்டுமே கடந்த காலத்திலும் எதிர்காலத்திலும் உள்ள குறிப்பிட்ட செய்திகளை வெளிப்படுத்துவார்.

28: இது அவர்கள் தங்கள் இரட்சகரின் செய்திகளைச் சேர்ப் பித்து விட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவே, மேலும் அவர்களிடம் இருப்பதை அவர் நன்கு அறிவார். அவர் அனைத்துப் பொருட்களையும் எண்ணிக் கணர்சிட்டு வைத்திருக்கிறார்.

மேற்கண்ட வசனங்களின்படி நமக்கு வாக்கரிக்கப்பட்ட மறுமை நாள் குறித்து மெய்ப்பிக்கும் தூதர் குர்ஆனிலிருந்து நமக்கு அறிவிக்கும் செய்திகளை இங்கே காண்போம்.

அல்குர்ஆன், இவ்வுலகம் நிச்சயம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்பதை அறிவிக்கிறது. (18:7-8; 69:13-15) தற்போதுள்ள வானமும் பூமியும் மாற்றப்பட்டு ஒரு புதிய வானமும் பூமியும் உண்டாக்கப்படும் என்றும் குர்ஆன் கூறுகிறது. (14:48) இந்த பூமி வேறு பூமியாகவும், இன்னும் வானங்களும் மாற்றப் படும் நாளில் மேலும் அடக்கி யாளும் ஏகனாகிய அல்லாஹ்வின் முன்னிலையில் வெளியாகி நிற்பார் கள்.

يَوْمَ تُبَدَّلُ الْاَرْضُ غَيْرَ الْاَرْضِ وَالسَّمٰوٰتُ

وَبَرَزُوْا لِلّٰهِ الْوَاحِدِ الْقَهَّارِ

ஹதீஸ்கள் என்ற அரபியர்களின் கட்டுக்கதைகளை மார்க்கம் என்று நம்புபவர்கள் தஜ்ஜால் என்ற மாய

மனிதனின் வருகை, இறைவனால் கைப்பற்றப்பட்டுவிட்ட 3:55,5, 117 ஈஸாநபியின் வருகை, மஹ்தி அல்லது இமாம் ஜமான் போன்ற கற்பனைப் பாத்திரங்களின் வருகை போன்றவற்றையும் சூரியன் மேற்கில் உதிக்கும், யமனிலிருந்து ஒரு தீப்பிழம்பு புறப்பட்டு அனை வரையும் விரட்டும் என்பன போன்ற இட்டுக்கட்டப்பட்ட பொய்களையும் நம்பி, அவை நிகழ்வதை எதிர்பார்த் துக் கொண்டிருக்கின்றனர்.

ஆயினும் குர் ஆனின் 47:18 வசனம் மறுமைக்கான அடையா ந ளங்கள் யாவும் குர்ஆனில் கொடுக் கப்பட்டுள்ளது என்பதைத் தெளி வாக்குகிறது. ஷைத்தானின் பொய் வாக்குறுதிகளை நம்பி நாம் ஏமாந்து போகாமல் நம்மைக் காத்த இறைவனுக்கே எல்லாப் புகழும்! இங்கே நாம் யுக முடிவுக்கான அடையாளங்கள் பற்றிக் குர் ஆன் கூறும் முன்னறிவிப்புக்களைப் பார்ப்போம். அவை:

**1. நிலவு பிளப்பது:** 54வது அத்தியாயத்தின் முதல் இரண்டு வசனங்கள் கூறுவது. 54:1 நேரம் நெருங்கி விட்டது. 54:2 நிலவு பிளந்து விட்டது.

இவ்வசனங்களின் உண்மைத் தாத்பர்யத்தை அறியாது அவசர குணம் கொண்ட அரபிகள் கடந்த காலச் சொல்லால் கூறப்படுவதால் இம் முன்னறிவிப்பு நிகழ்ந்து விட்ட தாகவும் முஹம்மத் நபி தன் விரலை நீட்டிக் காட்டி நிலவை இரண்டாகப் பிளந்ததாகவும் அதை அக்காலத்தில் உள்ள பலரும் கண்டதாகவும் ஒரு கட்டுக் கதையை அவசரப்பட்டுக் கட்டிவிட்டனர்.அதையே இன்றைய பெயர் தாங்கி முஸ்லிம்கள். உண்மை என்று எண்ணி வருகின்றனர். உண்மையில் நிலவு அவ்வாறு பிளந்தது உண்மையாக இருக்குமானால் இன்றைய விஞ்ஞானம் அதை மெய்ப்பித் திருக்கும். பல கோடி ஆண்டுகட்கு முன்னர் நிலவிலும், பூமியிலும் நிகழ்ந்த எவ்வளவோ விஷயங்களை ஆதாரத்துடன் கூறுமளவுக்கு அது வளர்ந்திருக்கிறது. ஆயினும் விஞ்ஞான ரீதியாக 1400 வருடங் கட்கு முன் அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கச் சாத்தியமில்லை என்றே அது கூறுகிறது.

மேலும், இவர்கள் கூறும் கதை, குர்ஆனைத் தவிர வேறு எந்த அற்புதமும் முஹம்மத் நபிக்குக் கொடுக்கப்படவில்லை (29:51) என்ற இறைவாக்குடன் முரண் படுகிறது. முஹம்மத் நபி முந்திய தூதர்கள் போல் எந்த ஒரு அற்புதமும் கொண்டு வரவில்லை என்பதே அன்றைய நிராகரிப்பாளர்களின் பிரலாபமாக இருந்தது என்று குர்ஆ ன் (10:20, 13:27, 29:50-51) கூறு கிறது. இப்படி ஒரு மாபெரும் அற்புதம் நிகழ்ந்திருந்தால் அவர்கள் அவ்வாறு கூறி இருக்க முடியுமா? அது முதலில் இறங்கிய வசனம், இது அதன் பின்னர் நடந்தது என்று குர் ஆனை அறியாத மக்களை மடையர்களாக்க உடனே முயற்சி செய்வர். ஆனால் அவர்கள் பதிவு செய்திருக்கும் ஹதீஸ்களின் அடிப்படையிலேயே 54 வது சூரா முதலில் இறங்கியதாகவும் (மக்கி) 13வது சூரா அதன் பின்னர் (மதனி) இறங்கியதாகவும் பதிவு செய்யப் பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உண்மையில் 54:1-2 ஆகிய வசனங்களின் பொருள் என்னவென்றால் 'மறுமை நாள் நெருங்கும் நேரம் நிலவில் பிளவு ஏற்படும் என்பதே' இது 1969 ஜுன் மாதத்தில் மனிதன் நிலவில் இறங்கி அதில் ஒரு பகுதியைப் பிளந்து பூமிக்குக் கொண்டு வந்த போது நிகழ்ந்தது. நிலவிலிருந்து பிளந்து எடுத்து வரப்பட்ட கற்களை இன்று பல அருங்காட்சி சாலைகளிலும், சில கோளரங்கங்களிலும் கல்லூரி களிலும் நாம் காண முடியும்.

இதன் மூலம் அல்குர் ஆனில் மறுமை நாளை முன்னறிவிக்கும் நிகழ்வுகளில் முக்கியமான ஒன்று நடந்தேறிவிட்டது என்பதை நாம் அறிகிறோம்.

**2. '19'ன் அடிப்படையிலான மாபெரும் அற்புதம் வெளிப் படுத்தப்படுவது:** (74:30-37) நிலவு பிளந்த அதே காலத்தில் படிப்படியாக '19' என்ற மாபெரும் அற்புதம் மெய்ப்பிக்கும் தூதரால் வெளிப் படுத்தப்பட்டது. (1969-74)

**3. பூமியிலிருந்து ஒரு படைப்பு:** (27:82) பூமியிலிருந்து ஒரு படைப்பு வெளிப்பட்டு, மனிதர்கள் தங்கள் இரட்சகரின் வசனங்கள் மீது உறுதியாக இல்லை என்று அது எச்சரிக்கும்.

மேற்கண்ட 27:82 வது வசனத்தின் அடிப்படையில் பூமியிலிருந்து ஒரு விலங்கு வெளிவந்து மனிதர்களிடம் நேரடியாகப் பேசும் என்றே இன்றைய முஹம்மதியர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அது எப்படி இருக்கும்? எப்படி அனைத்து மனிதர்களையும் சந்திக்கும்? என்ன மொழியில் பேசும்? என்பன போன்ற எத்தனையோ கேள்விகட்கு குர் ஆனுக்கு விளக்கம் என்று அவர்கள் நம்பும் ஹதீஸ்களில் எந்த விளக்கமும் இல்லை. பொய்யான செய்திகளின் அடிப்படையில் ஒரு விலங்கை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டி ருப்பதால் அப்படைப்பு வெளிப் பட்டு விட்டது என்பதைக் கூட அறியாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

பூமியில் உள்ள பொருள்களால், ஆக்கப்பட்ட அப்படைப்பு 'கம்ப் யூட்டர்' என்பதே உண்மையாகும். இதுவே 19 என்ற எண்ணின் அடிப்படையில் குர் ஆனில் உள்ள இரகசியக் குறியீட்டைக் கண்டுபிடிக்க உறு துணையாக, கருவியாக இருந்தது. 27:82 மனிதர்கள் தங்கள் ரப்பின் வசனங்களில் 'யகீனோடு' (உறுதியாக) இல்லை என்பதை அப்படைப்பு சொல்லிக் காண்பிக்கும் என்பதையும் 74:31 19' என்ற எண் வேதம் கொடுக்கப் பட்டோருக்கும் நம்பிக்கை யாளர்களுக்கும் 'யகீனை (உறுதியை)க் கொடுக்கும் என்று கூறுவதையும் இங்கே நினைவில் கொள்ள வேண்டும்.

ஹதீஸ்களின் அடிப்படையில் குர்ஆனைப் புறக்கணிக்கும் அவல நிலையையும், குர்ஆனில் ஆங்காங்கே இவர்கள் செய்து வைத் திருந்த சிதைவுகளையும் '19' என்ற அற்புதம் காட்டிக் கொடுத்ததை நாம் இன்று அறிந்திருக்கிறோம். (பார்க்க நமது இதழின் இறைவனின் முத்திரை 19') குர்ஆன் என்ற வார்த்தையைக்

கூட இருவிதமாக எழுதிவிட்டு, (ஹஃப்ஸ் மற்றும் வர்ஷ் பிரதிகள் - அதாவது, அல்அஸ்ஹர் பிரதி மற்றும் இந்திய பாகிஸ்தான் பிரதிகள்) அவை இரண்டும் சரிதான் என்றும் கூறிவிட்டு அதே நேரத்தில் குர்ஆன் ஒரு எழுத்துக்கூட மாற்றப்படாமல் எங்கள் முன்னோர்களால் தான் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர்கள் நம்பிய ஹதீஸ்களை நாங்களும் நம்புவோம் என்று கூறி குருட்டுத்தனமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்ணகிறது இன்றைய ம முஹம்மதிய சமூகம். அல்அஸ்ஹர் பிரதியில் குர்ஆன்' என்ற வார்த்தை ஒரு ஹம்ஸாவுடனும், இந்தியப் பிரதிகளில் ஹம்ஸா இல்லாமலும் எழுதப்படுகிறது.

இதன் பின்னரும் ஒரு எழுத்துக் கூட மாற்றப் படவில்லை என்று கூறுவதை உலகம் எப்படி ஏற்கும்? க இரண்டில் எது சரி? ஹம்ஸாவுக்கு மதிப்பில்லை என்பர். அப்படி யானால் அது அல்அஸ்ஹர் பிரதியில் ஏன் இடம்பெறுகிறது? இருப்பது சரிதான் என்றால் இந்தியப் பிரதிகளில் அது ஏன் எழுதப்படுவதில்லை? குர்ஆன் என்ற வார்த்தை குர்ஆனில் 58 முறை இடம் பெறுகிறது. எனவே இதனடிப்படை யில் 58 எழுத்துக்கள் குர்ஆனில் மாற்றப்பட்டுள்ளன. மேலும் இன்ஸான், ஆயத் போன்ற வார்த்தைகளும் இருவிதமாக எழுதப்படுகின்றன. இத்தகைய சிதைவுகளை இறைவனின் முத்திரைக் கையொப்பம் 19' தெளிவாக அடையாளம் காட்டி எது சரியான குர்ஆன் என்பதைக் காட்டுவதையும் மேலும் இவ்வற்புதம் அல்குர்ஆன் இறைவனிடமிருந்து வந்தது தான் என்ற உறுதியை மனிதர்கட்குக் கொடுப்ப தையும் நாம் காண்கிறோம்.

உலகப் பொது மொழியான கணக்கியலில் அப்படைப்பு (கம்ப்யூட்டர்) மனிதர்கள் தங்கள் இரட்சகரின் வசனங்களில் உறுதியில் லாமல் உள்ளதை எடுத்துக் கூறுகிறது என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும், இச்செய்தி முழுமையும் மனிதர்களால் தவிர்த்து விட முடியாத கம்ப்யூட்டர் வலைப்பின்னல் ஆன Internetல் இருந்து கொண்டு உலகெங்கும் உள்ள மக்களுக்கு இச்செய்தியைத் தொடர்ந்து கூறிக் கொண்டு வருகிறது - வரும், என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாளும் கம்ப்யூட்டர் என்ற இப்படைப்பின் மூலம் மனிதர்கள் இச்செய்தியை அறிந்து வருகிறார்கள். இறை வசனங்களில் உறுதியில்லாத நிலையில் இருந்து மாறி இறைவனின் வசனங்கள் மீது அசைக்க முடியாத உறுதி (யகீன்) கொண்டு வருகிறார்கள். இறைவனின் ஏற்பாடான கம்ப்யூட்டர் என்னும் இப்படைப்பு முழு மனித சமுதாயத்திற்கும் இச்செய்தியை சொல்லி முடிக்கும் என்பது திண்ணம்.

**கவனத்திற்கு : 27:82 என்ற வசனத்தில் இடம்பெறும் எண் களைக் கூட்டினால் 2+7+8+2=191**

(மறுமை நாளின் அடையாளங்கள் இன்ஷாஅல்லாஹ் தொடரும்)

(ஆ.ர்)

# இஸ்லாத்தின் முதல் தூண்

# லா இலாஹ இல்லல்லாஹ்

(மெய்ப்பிக்கும் தூதரின் குர் ஆன் மொழிபெயர்ப்பின் பின் இணைப்பிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது )

3:18வது வசனம் இஸ்லாத்தின் (அடிபணிதல்) முதல் தூணைக் குறிப்பிடுகிறது.

அவரைத் தவிர வேறு யாரும் கடவுள் இல்லை என்று இறைவன் சாட்சி பகர்கிறார். வானவர்களும் அறிவுடையவர்களும் அவ்வாறே செய்கின்றனர்.

இம்முக்கியத் தூண் சிதைக்கப் பட்டு விட்டது. கோடிக்கணக்கான இன்றைய முஹம்மதியர்கள் ஷைத்தா னின் பல தெய்வக் கொள்கையைப் பின்பற்றி, இறைவனின் பெயருடன் முஹம்மதின் பெயரும் கூறப்பட வேண்டும் என்று வலியுறுத்து கிறார்கள். ஆயினும் 39:45ல் கூறப்படும் குர்ஆனின் மாபெரும் அளவு கோல் இத்தகைய முஸ்லிம் களை நம்பிக்கையற்றவர்கள் என்று முத்திரையிடுகிறது.

"இறைவன் மட்டும் தனித்துக் **கூறப்பட்டால்** மறுமையை நம்பாத வர்களின் உள்ளங்கள் வெறுப்பினால் சுருங்கி விடுகின்றன. ஆனால் அவருடன் மற்றவர்களும் சேர்த்துக் கூறப்பட்டால் அவர்கள் திருப்தி யடைந்து விடுகிறார்கள்.

இந்த அளவுகோலைப் பற்றி நான் விரிவான ஆராய்ச்சிகள் நடத்தி இருக்கிறேன். அவற்றின் அடிப்படையில் நான் ஒரு வியப்பூட்டும் முடிவுக்கு வந்திருக்கின்றேன். 3:18ல் கட்டளையிடப்படும் இஸ்லாத்தின் முதல் தூணை ஏற்றுக் கொள்ளா தவர்கள், சரியான ஷஹாதத்தைக் கூறுவதை விட்டும் இறைவனால் தடுக்கப் படுகிறார்கள். அவர்களால் முஹம்மதின் பெயரைக் கூறாமல் **"அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ்"** என்பதை மட்டும் கூற முடியாது. தன்னை முஸ்லிம் என்று கூறிக் கொள்ளும் எந்த ஒரு இணை வைப்பாளரிடமும் நீங்கள் இதை முயற்சித்துப் பாருங்கள். **அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ்** என்பதை மட்டும் கூறும்படி அவர்களிடம் சவால் விடுங்கள்.

இதை அவர்களால் ஒருபோதும் சொல்ல முடியாது. இதுதான் இப்றாஹீமுடைய மார்க்கம். (2:130, 135; 3:95; 4:125; 6:161;12:37,38; 16:123) அதன் ஒரே கொள்கை முழக்கம் 'லா இலாஹ இல்லல்லாஹ் (ஒரே இறைவனைத் தவிர வேறு யாரும் கடவுள் இல்லை) என்பதுதான். இப்றாஹிமுக்கு

முன்னால் முஹம்மத் தோன்ற வில்லை.

**ஒரு மாபெரும் இறை நிந்தனை**

முஹம்மதின் விருப்பத்திற்கு மாறாக அவரை இறைவனுடன் இணை வைப்பதற்காக குர் ஆனைச் சிதைப்பதைவிட பெரிய இறை நிந்தனை எதுவுமில்லை. சூரா முஹம்மதின் (47) 19 வது வசனம் கூறு கிறது. **"இறைவனைத் தவிர வேறு யாரும் கடவுள் இல்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்".**

கீழே கொடுக்கப்பட்டிருப்பது இன்றைய முஸ்லிம்கள் பயன்படுத்தி வரும் ஒரு சுலோகமாகும். குர்ஆனின், சிறப்பான எழுதும் முறையில் (Caligraphy) ஃபஃலமு அன்னஹு லா இலாஹ இல்லல் லாஹ்' என்பதுடன் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்பதையும் இதில் இணைத்து எழுதியுள்ளார்கள். இதன் மூலம் 47:19ல் கூறப்பட்டிருப்பது இதுதான் என்பது போன்ற தோற்றத்தை உண்டாக்க முயற்சிக்கின்றார்கள். எவ்வளவு பெரிய இறை நிந்தனை! மேற்கண்ட படம் Review of Religions (The London Mosque, 16, Gressenhall Road, London SW185QL. England) என்ற இஸ்லாமியப்பத்திரிகையில்இருந்து எடுக்கப்பட்டது.



சிதைக்கப்பட்ட இஸ்லாத்திற்கு ஒரு சரியான உதாரணம்!

(ஆ.ர்)

# கணிதக் கட்டமைப்பில் நான்கு புனித மாதங்கள்

19ன் அடிப்படையிலான இறைவனின் அற்புதக் கணித கட்டமைப்பு நம்பிக்கை கொண்டவர்களின் நம்பிக்கையை அதிகப்படுத்துவதாகவும், மேலும் சந்தேகத்தைப் போக்கக் கூடியதாகவும் உள்ளது. 74:31, 32

| மாதம் | எண் மதிப்பு | மொத்தம் |
|---|---|---|
| துல்-ஹஜ் | 700,6,1,30,8,3,5 | 753 |
| முஹ்ரம் | 40,8,200,40 | 288 |
| ஸபர் | 90,80,200 | 370 |
| ரபியுல் அவ்வல் | 200,2,10,70,1,6,30 | 319 |

அரபி காலண்டர்படி மேற்குறிப்பிடப்பட்ட நான்கு மாதங்களும் முறையே 12, 1, 2, 3 ஆக இருக்கிறது. முதலில் மாதம் 12ஐயும் தொடர்ந்து அதன் எண் மதிப்பையும் வரிசையாக எழுதினால் வரும் எண் 19ன் பெருக்கு தொகை ஆகும்.

12753 1 2882 370 3319 - 19x67121 - 7306510701

மேலும் இதன் கூட்டு தொகையும் 19ன் பெருக்கு தொகை ஆகும்.

12+753+1+288+2+370+3+319+-1748 (19X92)

# அர்த்தம் - அனர்த்தம்

இன்று உலகின் பல மொழிகளிலும் குர் ஆன் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் இதுவரை ஐந்து குர்ஆன் மொழிபெயர்ப்புக்கள் வெளியாகி உள்ளன. இவை அனைத்தும் அரபி அல்லாதவர்கள் அரபு மொழி கற்றுக் கொண்டு செய்த மொழி பெயர்ப்புக்களே . இவை அனைத்தும் ஹதீஸ்களின் விளக்கங்களுக்காகக் குர்ஆன் வசனங்களைச் சிதைத்தும் திரித்தும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவர்களால் சிதைக்கப்பட்ட சில வசனங்களையும் அவற்றிற்குரிய சரியான மொழிபெயர்ப்பையும் வாசகர்கள் மற்ற மொழி பெயர்ப்புக்களோடு அரபியைத் தாய்மொழியாகக் கொண்ட மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபாவின் மொழி பெயர்ப்பையும் ஒப்பிட்டு,

அவற்றில் எது சிறந்தது, சரியானது என்று அவர்களே தீர்மானித்துக் கொள்ளலாம். இவர்கள் .

அர்த்தங்களை அனர்த்தங்களாக்கி இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

( இறைவனின் அறிவுள்ள அடியார்கள்)அனைத்துச்சொற்களையும் செவியேற்று (பரிசீலித்து) அவற்றில் சிறந்ததை எடுத்துச் செயல்படுபவர் (39:18)

### அத்:2. அல்பகறா - வசனம் 54

### அல்லாமா அ.கா. அப்துல் ஹமீது (பாக்கவி) மொழிபெயர்ப்பு

2:54 பின்னும் (நினைத்துப் பாருங்கள்) மூஸா தன் சமூகத்தாரை நோக்கி " என்னுடைய சமூகத்தாரே! நீங்கள் காளைக் கன்றைத் தெய்வமாக) எடுத்துக் கொண்டதனால் (பகுத்தறிவுடைய) நீங்கள் (கேவலம் ஒரு மிருகத்தை வணங்கி) மெய்யாகவே உங்களுக்கு தீங்கிழைத்துக் கொண்டீர்கள். நீங்கள் மனம் வருந்தி உங்கள் சிருஷ்டி கர்த்தாவிடம் மீண்டும் <u>உங்(களிலுள்ள வரம்பு மீறியவர்) களை நீங்களே வதை செய்து கொள்ளுங்கள்.</u> இதுதான் உங்கள் சிருஷ்டி கர்த்தாவிடம் உங்களுக்கு நன்மை தரும் என்று கூறினார். ஆகவே (அவ்வாறே நீங்களும் செய்வதனால்) உங்களை அவன் மன்னித்துவிட்டான். நிச்சயமாக அவன் மிக மன்னிப்போனும் நிகரற்ற அன்புடையோனுமாயிருக்கிறான்.

**மௌலானா எம். அப்துல் வஹாப் எம்.ஏ., பி.டி.எச்., கே.ஏ. நிஜாமுகைதீன் மன்பயீஹா பின் ஆர்.கே. அப்துல் காதிர் பாகவி மொழிபெயர்ப்பு**

2:54 மூஸா தம் சமூகத்தாரை நோக்கி என் சமூகத்தாரே! நிச்சயமாக நீங்கள் காளைக் கன்றை (தெய்வமாக) எடுத்துக் கொண்டதன் மூலம் உங்களை படைத்தவனிடம் நீங்கள் தவ்பாச் செய்து (பாவ மீட்சி) கோருங்கள்; உங்களை நீங்களே வெட்டிக் கொள்ளுங்கள்; அதுவே உங்களை படைத்தவனிடம் உங்களுக்கு நன்மையாகும்" எனக்கூறியதையும் (நினைவு கூறுங்கள்; அவ்வாறே நீங்கள் செய்வதனால்) உங்களை அவன் மன்னித்தான்; நிச்சயமாக, அவன்தான் தவ்பாவை (மிகுதமாக) ஏற்(று மன்னிப்) பவனாகவும், மிகக் கிருபை உடையோனாகவும் இருக்கிறான்.

**IFT மொழி ஆக்கம் :**

2:54 மேலும், இதையும் நினைவு கூறுங்கள்; மூஸா (இந்த அருட்கொடைகளைப் பெற்று திரும்பி வந்து) தம் சமுதாயத்தார்களை நோக்கி: ' 'என்னுடைய சமுதாயத்தாரே, காளைக் கன்றை நீங்கள் தெய்வமாக்கிக் கொண்டதனால் திண்ணமாக உங்களுக்கு நீங்களே (பெரும்) அநீதி இழைத்துக் கொண்டீர்கள். ஆகவே நீங்கள் உங்களைப் படைத்த இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள். மேலும் உங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்ளுங்கள்.[23] இதுவே உங்களைப் படைத்த இறைவனிடம் உங்களுக்கு நன்மை பயக்கும்" என்று கூறினார். (அந்நேரத்தில்) உங்கள் இறைவன், உங்களின் பாவமன்னிப்புக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்போனும் கருணை பொழிபவனுமாய் இருக்கின்றான்.

**ஜான் டிரஸ்ட் வெளியீடு**

2:54 மூஸா தம் சமூகத்தாரை ) நோக்கி: "என் சமூகத்தாரே! நீங்கள் ;காளைக் கன்றை (வணக்கத்திற்காக) எடுத்துக் கொண்டதன் மூலம் உங்களுக்கு நீங்களே அக்கிரமம் செய்து கொண்டீர்கள்; ஆகவே உங்களைப் படைத்தவனிடம் பாவமன்னிப்புக் கேளுங்கள்: உங்களை நீங்களே மாய்த்துக் கொள்ளுங்கள்; அதுவே உங்களைப் படைத்தவனிடம், உங்களுக்கு நற்பலன் அளிப்பதாகும்" என்று கூறினார். (அவ்வாறே நீங்கள் செய்ததனால்) அவன் உங்களை மன்னித்தான் (என்பதையும் நினைவு கூறுங்கள்) நிச்சயமாக, அவன் தவ்பாவை ஏற்(றுமன்னிப்) பவனாகவும், பெருங்கருணை யுடையோனாகவும் இருக்கிறான்.

**காதியானிகளின் மொழிபெயர்ப்பு**

2:55 மூஸா தமது சமுதாயத்திடம் என் சமுதாயத்தினரே! நீங்கள் காளைக்கன்றை (வணங்கத்தக் கதாக) ஆக்கி உண்மையிலேயே உங்களுக்கு அநீதியிழைத்துக் கொண்டீர்கள். எனவே நீங்கள் உங்களைப் படைத்தவனுக்குப் பணியுங்கள். <u>நீங்கள் உங்கள் தீய ஆசை) களையே கொன்று விடுங்கள்.</u> இது உங்களைப் படைத்தவனிடம் உங்களுக்கு மிகவும் நன்மை பயப்பதாகும் என்று சொன்ன நேரத்தையும் (எண்ணிப் பாருங்கள்) (நீங்கள் அவ்வாறு செய்த போது) அவன் உங்களின் பால் கருணையோடு மீண்டும் கவனம் செலுத்தினான். நிச்சயமாக அவன் (தனது அடியார்களின் பால்) மிகுந்த கவனம் செலுத்தக் கூடியவனும் மேன்மேலும் அருள் செய்யக்கூடியவனும் ஆவான்.

மேற்கண்ட மொழி பெயர்ப்புக் களில், அனைவருமே இறைவன் தற்கொலை செய்து கொள்ளக் கட்டளையிட்டதைப் போல் மொழி பெயர்த்துள்ளனர். தற்கொலை செய்து கொள்ளக் கூடாது என்ற வேத கட்டளைக்கு (4:29) மாற்றமாக இம்மொழிபெயர்ப்பு உள்ளதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். இவ்வசனத்திற்கு அம்மொழி பெயர்ப்புக்களின் அடிக்குறிப் பையும் படிக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம். IFT மொழிபெயர்ப் பின் அடிக்குறிப்பையும் இங்கே கொடுத்துள்ளோம். இவர்கள் எவ்வளவு பெரிய கருத்துப்பிழை செய்திருக்கிறார்கள் என்றும், இவ்வசனத்தின் சரியான **ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்பு என்ன என்பதையும் பக்கம் 24ல் பார்த்து அறிந்து கொள்ளலாம்.**

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் இவர்கள் சிதைத்திருக்கும் மற்றொரு வசனமான 22:15ன் சரியான மொழிபெயர்ப்பு வெளியிடப்படும்.

IFT அடிக்குறிப்பு : [23] அதாவது, காளைக் கன்றை கடவுளாக்கி, அதனை வழிபட்ட உங்கள் சமூகத்தைச் சேர்ந்த மக்களைக் கொன்று விடுங்கள்.

وَإِذْ قَالَ مُوسَىٰ لِقَوْمِهِ يَٰقَوْمِ
إِنَّكُمْ ظَلَمْتُمْ أَنفُسَكُم بِٱتِّخَاذِكُمُ
ٱلْعِجْلَ فَتُوبُوٓا۟ إِلَىٰ بَارِئِكُمْ فَٱقْتُلُوٓا۟
أَنفُسَكُمْ ذَٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ عِندَ
بَارِئِكُمْ فَتَابَ عَلَيْكُمْ ۚ إِنَّهُۥ هُوَ
ٱلتَّوَّابُ ٱلرَّحِيمُ ○

# ஹதீஸ்களின் உண்மை நிலை

சில மெய்யான இறையடியார்கள் வழிதவறி ஹதீஸ்களை மார்க்க ஆதாரமாக ஏற்றுக் கொள்வர் என்பதை அறிந்த இறைவன் ஹதீஸ்கள் இட்டுக் கட்டப்பட்ட கட்டுக்கதைகள்தான் என்று அறிந்து கொள்ளப் போதுமான பற்பல ஆதாரங்களை ஏற்படுத்தி இருக்கிறார். அவை மெய்யான இறை அடியார்க்கு ஹதீஸ்கள் மார்க்க ஆதாரம் அல்ல என்றும், அவற்றைப் பின்பற்றுவது இணைவைப்பாகும், நபிக்கு மாறு செய்வதாகும் என்றும் அறிவித்துக் கொண்டிருக்கின்றன. ஹதீஸ்களைப் பின்பற்றுவதாகக் கூறுவோர் உண்மையில் அதைப் பின்பற்றுவதில்லை என்றும் அவை பின்பற்றப்பட முடியாதவை என்றும் சென்ற இதழில் நாம் கண்டோம். இன்றைய முஹம்மதியர்கள் பின்பற்றுவதெல்லாம் ஒரே ஒரு ஹதீஸ்தான்! அது, 'யார் லாஇலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்று கூறுகிறாரோ அவருக்கு என் பரிந்துரை கிட்டும், அவர் நரகிலிருந்து வெளியேறி சுவனம் செல்வார் என்பதே. மற்ற ஹதீஸ்களெல்லாம் அவர்களுக்கு ஒரு பொருட்டில்லை.

ஏனெனில் ஹதீஸ்களிலேயே, அவை மார்க்க ஆதாரமல்ல என்பதற்கான ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. அவை மெய்யான இறையடியார்களை குர்ஆனை மட்டுமே பின்பற்றுமாறு வழிகாட்டுகிறது. ஹதீஸ்களிலிருந்து நாம் ஆதாரங்களைக் காட்டத் தேவையில்லை என்றாலும் நிராகரிப் பாளர்களையும், நயவஞ்சகர்களையும் இறைவனின் திட்டம் எவ்வாறு வெளிப் படுத்துகிறது என்பதைக் காட்டவே இவற்றை இங்கே கூறுகிறோம்.

1. இப்னுஸயீத் அறிவிக்கிறார்.

"என்னிடமிருந்து குர்ஆனைத் தவிர வேறு எதையும் எழுதாதீர்கள். எவரேனும் அவ்வாறு எழுதியிருந்தால் , அவர் அதை அழித்து விட வேண்டும்.

2. இப்னு ஹம்பலிடமிருந்து: "ஸைது இப்னு தாபித் (நபியின் வளர்ப்பு மகன், எழுத்தர் மற்றும் செயலாளர்) முஆவியாவைச் சந்தித்த போது நபிவாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறினார். முஆவியா அச்சம்பவத்தால் கவரப்பட்டு சிலரை அச்சம் பவத்தினை எழுதிக் கொள்ளும்படி கூறினார். ஆனால் ஸைது கூறினார்: 'இறைவனின் தூதர் அவருடைய வாழ்க்கைச்

செய்திகளை எழுதிக் கொள்ளக் சம் கூடது என்று எங்களுக்கு கட்டளையிட்டுள்ளார்."

மேற்கண்ட சம்பவம் நபி இறந்து 30 வருடம் கழித்து நடந்ததாகும். இதிலிருந்து தான் விதித்த தடையை இறைவனின் தூதர் தன் மரணம் வரையில் மாற்றிக் கொள்ள வில்லை, என்பதும் நேர்வழி பெற்ற கலீஃபாக்கள் என்று கூறப்படும் நால்வரும் கூட நபியின் கட்ட ளையை மதித்து, ஹதீஸ்களை எழுதும் முயற்சியில் ஈடுபடவில்லை என்பதும் தெளிவாகிறது.

3. இப்னு அல்ஸலாஹ் என்பவர், எழுதிய பிரபலமான புத்தகமான 'உலூம் அல்ஹதீஸில் அபூஹீரைரா அறிவிப்பதாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். "நாங்கள் நபியின் வாழ்வில் நடந்த சில சம்பவங்களை எழுதிக் கொண்டிருந்தபோது நபி எங்களிடம் வந்து 'என்ன எழுதுகிறீர்கள்' என்று கேட்டார்கள். நாங்கள் கூறினோம் 'உங்களி டமிருந்து பெறப்பட்ட செய்திகளை எழுதுகிறோம். நபி கோபமாகக் கூறினார்: 'அல்லாஹ்வின் புத்தக மல்லாத மற்றொன்றா? நாங்கள் கேட்டோம் "நாங்கள் உங்களைப் பற்றிப் பேசக்கூடாதா?' அவர் கூறினார்: 'என்னைப் பற்றிப் பூ பேசுங்கள் அது நல்லதுதான். ஆனால் எவரேனும் பொய் கூறினால் அவர் நரகிற்குச் செல்வார்' பின் நாங்கள் ! எழுதிய அனைத்தையும் சேர்த்து " வைத்து எரித்து விட்டோம்"

4. இதே போன்ற மற்றொரு சம்பவம்: 'தக்ஈதல் இல்ம்' என்ற புகழ்பெற்ற ஹதீஸ் புத்தகத்திலும் இடம்பெற்றுள்ளது.

5. இப்னு ஹன்பல் தன்னுடைய 'முஸ்னது' என்ற புத்தகத்தில் அப்துல்லா இப்னு உமர் அறிவிப் பதாகப் பதிவு செய்திருக்கிறார்.

"வெகு விரைவில் உலகை விட்டுப் பிரியப் போவதைப் போல் ஒருநாள் நபி எங்களிடம் வந்து 'நான் உங்களை (மரணத்திற்குப் பின்) விட்டுச் சென்றால் நீங்கள் இறைவனின் வேதத்தை மட்டும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அதில் ஹராம் (தடுக்கப்பட்டது) என்று கூறப்பட்டவற்றை ஹராமாகக் கொள்ளுங்கள். ஹலால் (ஆகுமானது) என்று கூறப் பட்டவற்றை ஆகுமாக்கிக் கொள்ளுங்கள். "இந்த ஹதீஸில் 'சுன்னத்' என்பதைப் பற்றிய குறிப்பு இல்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

6. தக்யீதல் இல்ம் என்ற புத்தகத்தில் அபூஸயீதல் குத்ரி கூறுகிறார்: 'நபி கூறியவற்றை எழுதிக் கொள்ள நான் நபியிடம் அனுமதி கேட்டேன். அவர் மறுத்துவிட்டார்.

7. 'ஹஜ்ஜத்துல் விதா' என்னும் நபியின் இறுதி ஹஜ்ஜில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். ஆயினும் இம் முக்கிய நிகழ்ச்சியில் நபி பேசியது மூன்று விதமாக ஹதீதுப் புத்தகங்களில் பதியப்பட்டுள்ளது.

1. நான் உங்களிடம் விட்டுச்

செல்வதை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டால் ஒரு போதும் வழி தவற மாட்டீர்கள். அவை இறைவேதமும் என் குடும்பத்தாரும் ஆகும். முஸ்லீம் 44/4, 2408 இப்னு ஹம்பல் 4/366; தாரமி 23/1 3319. இது ஷியாக்கள் உருவாக்கிய ஹதீஸ் ஆகும்.

2. நான் உங்களிடம் விட்டுச் செல்வதை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டால் ஒரு போதும் வழிதவற மாட்டீர்கள். அவை இறைவேதமும் என் 'சுன்னத்தும் ஆகும். முஅத்தா 46/3 இது சன்னி பிரிவினர் இட்டுக்கட்டிய ஹதீஸாகும். 3. நான் உங்களிடம் விட்டுச் செல்வதை நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டால் ஒருபோதும் வழிதவற இ மாட்டீர்கள். அது இறை வேதமே ஆகும். முஸ்லீ ம் 15/19 nu1218, இப்னு மாஜா 25/84, அபூதாவூத் 11/ 56 இவற்றில் உண்மையில் முஹம்மத் நபி எதைக் கூறி இருப்பார் என்பதை சிந்தனை உடையவர்கள் நிச்சயம் விளங்கிக் கொள்ள முடியும்.

இறை வேதம் மட்டுமே என்ற ஹதீஸை சன்னி, ஷியா பிரிவினர் வெறுக்கின்றனர். குர் ஆனுக்கு ஒத்த கூற்று இதில் கடைசியாகக் கூறப்பட்டிருப்பதே என்பதை குர்ஆனைப் படிப்பவர்கள் நிச்சயம் அறிந்து கொள்ள முடியும். சன்னி, மற்றும் ஷியா பிரிவினரில் பெரும்பா லோருக்கு இப்படி ஒரு ஹதீஸ் இருப்பதே தெரியாது. உண்மையில், அவர்கள் தெரிந்து கொள்ள விரும்ப வில்லை. ஏனெனில் உண்மை சுடும். ஆனால் நரக நெருப்போ அதைவிட சூடானது. பல்லாயிரக் கணக்கானோர் சாட்சியாக இருந்த ஒரு சம்பவம் இவ்வாறு திரித்துக் கூறப் படுமானால் ஒரே ஒருவர் சாட்சியாக உள்ள (ஆஹத் ஹதீஸ்கள்) பல்லாயிரக் கணக்கான ஹதீஸ்களின் நிலை பற்றி நாம் சிந்திக்க வேண்டாமா?

நபியின் காலத்திலேயே ஹதீஸ்கள் எழுதப்பட ஆரம்பித்தன என்று சிலர் கூறுவது உண்மைதான். ஆனால் முஹம்மத் நபியும் அவருக்குப் பின் ஆட்சி செய்தவர்களான நான்கு கலீஃபாக்களும் அவற்றைக் கடுமை யாக எதிர்த்தனர். குர்ஆன் அல்லாத செய்திகளை எழுதுபவர்களை இழிவுடன் நடத்தினர், கண்டித்தனர் மீறி எழுதப்பட்ட சில ஹதீஸ்களை ஒன்று சேர்த்து எரித்தனர். இந்த உண்மைகளும் ஹதீஸ்களில் பதியப் பட்டுள்ளன.

அபூஹீரைரா என்பவன் ஹிஜ்ரி ஏழாம் ஆண்டில் யமனிலிருந்து மதினாவுக்கு வந்து முஸ்லீமாக மாறிக் கொண்டான். நபியுடன் அவன் இருந்தது இரண்டு வருடத்திற்குச் சற்றுக் குறைவே. ஆயினும் இவன் நபியின் பெயரால் 5000க்கும் மேற்பட்ட (சரியாக 5374) ஹதீஸ்களை அறிவித்திருக் கிறான். ஆயிஷா, அபூபக்கர், உமர், அலி ஆகியோருடன் இதை ஒப்பிட்டுப் பாருங்கள். இவர்கள் அனைவரையும் விட அதிகமான ஹதீஸ்களை அறிவிப்பவன் இவனே. இவனுடைய ஹதீஸ்களில் பெரும்

பான்மையானவை 'ஆஹத்' என்ற வகை ஹதீஸ்களாகும். அதாவது ஒருவர் மட்டும் கேட்ட ஹதீஸ்கள்! அந்த ஒருவர் வேறு யாருமில்லை . அபூஹீரைராவேதான்.

நபியின் நெருங்கிய தோழர்கள் சிலரும் நபியின் மனைவியான ஆயிஷாவும், அபூஹீரைராவைப் பொய்யன் என்றும், மக்களிடம் சிறப்புப் பெறுவதற்காக நபியின் மீது பொய்களை இட்டுக் கட்டியவன் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

நேர்வழிபெற்ற இரண்டாம் கலீஃபாவான உமர் 'அபூஹீரைரா நபியின் பெயரால் ஹதீஸ்களை அறிவிப்பதை நிறுத்தாவிட்டால் அவனை நாடுகடத்தி விடுவதாக எச்சரிததார். இதற்குப் பயந்து அவன் ஹதீஸ்களை அறிவிப்பதை நிறுத்திக் கொண்டான். ஆனால் உமர் கொல்லப்பட்ட பிறகு அவன் மீண்டும், ஹதீஸ்களை அறிவிக்கத் தொடங்கி விட்டான். அவன் ஸிரியாவில் உள்ள முஆவியாவின் அரண்மனையில் தங்கி அவருடைய அரசியலுக்கு வசதியாக ஹதீஸ்களை கற்பனை செய்து அறிவித்தான்.

அபூ ஜாஃபர் அல் அஸ்கஃபி தன் புத்தகத்தில் எழுதுகிறார். 'முஆவியா அபூ ஹீரைராவின் தலைமையில் சிலரைத் தேர்ந்தெடுத்துத் தன் அரசியல் விரோதியான அலீக்கு எதிராக ஹதீஸ்களை இட்டுக்கட்டும்படி பணித்தான். முஆவியாவின் அரண்மனையில் தங்கிக் கொண்டு அலீக்கு எதிரான ஹதீஸ்களை அவன் உருவாக்கினான். இக்காலத்தில்தான் ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்படுவது இறைவனுக்கும், தூதருக்கும் கட்டுப்படுவது போன்றதாகும் என்ற ஹதீஸ் உருவாக்கப்பட்டது. ஆனால் குர்ஆனோ கலந்தாலோசனை (Democratic, Parliamentarian System) செய்வதை கடமையாக்குகிறது!

அபூ ஹீரைரா, யூதனாயிருந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட கஅப் அல் அஹ்பார் என்பவன், யூதர்களின் பாழ்படுத்தப்பட்ட புத்தகங்களின் துணையுடன் குர்ஆனுக்குக் கூறிய விளக்கங்களின் அடிப்படையிலும் ஹதீஸ்களை இட்டுக்கட்டினான். சிதைக்கப்பட்ட தவ்ராத்தில் உள்ள சில பொய்க் கதைகளின் அடிப்படையில் குர்ஆனுக்கு முற்றிலும் முரணான சில ஹதீஸ்களை அவன் உருவாக்கினான்.

இஸ்லாமிய சரித்திர ஆசிரியர்கள் அபூ ஹீரைராவைப் பற்றிய பற்பல தகவல்களை எழுதி வைத்திருக்கிறார்கள். அவற்றில் ஒன்று! அபூஹீரைராவை பஹ்ரைனுக்கு ஆளுநராக அனுப்பிய இரண்டு வருடங்களில் அவன் மிகவும் பணக்காரன் ஆகிவிட்டான். எனவே உமர் அவனைத் திரும்ப அழைத்து அவனிடம் கேட்டார்: "அல்லாஹ்வின் விரோதியே நீ இறைவனின்

பணத்தைத் திருடிவிட்டாய். நான் உன்னை பஹ்ரைனுக்கு அமீராக எ அனுப்பிய போது உன்னிடம் இரு காலணிகள் கூட இல்லை . இவ்வளவு பணம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது?" மேலும் அவனிடமிருந்து பணத்தையும் பறிமுதல் ன செய்ததாகச் சரித்திரத் தகவல்கள் கூறுகின்றன.

அபூ ஹீரைரா ஏராளமான ஹதீஸ்களை இட்டுக்கட்டிக் கூறிய தாகக் குற்றம் சாட்டப்பட்டவன். நபியின் மனைவியான ஆயிஷா, அபூஹீரைரா, நபி கூறித் தான் கேட்டிராத ஹதீஸ்களையெல்லாம் அறிவிப்பதாக, அரை குறை யாகவும், மாற்றியும் செய்திகளைக் கூறுவதாக பலமுறை குற்றம் சாட்டி யுள்ளதாக செய்திகள் உள்ளன.

அபூஹீரைரா பெண்கள் மேலும், நாய்கள் மேலும் கொண்ட வெறுப் புக்குப் பிரபலமானவன். அவன் இஸ்லாமியப் பெண்களை இழிவு படுத்தும் விதமாகவும், நாய்கள் வளர்க்கக் கூடாது, கறுப்பு நாய்கள் கொல்லப்பட வேண்டும் என்றும் கூறும் ஹதீஸ்களைத் தயாரித்தார். புகாரி, முஸ்லிம் ஆகியோர் ஹதீஸ்களை அறிவிப்பதற்கு உள்ள தகுதிகள் என்று கருதியவற்றை அபூஹீரைராவுக்குப் பிரயோ கித்திருந்தால் நிச்சயம் அபூஹீரைரா ஹதீஸ்களை அறிவிப் பதற்கு எந்தத் தகுதியும் இல்லாதவன் என்று ஒதுக்கப்பட்டிருப்பான்!

தஃவீல் முக்தலஃப் அல் ஹதீஸ் என்ற புத்தகத்தில் இப்னு குதைபா அல்தினாரி ஆயிஷாவுக்கும், அபூஹீரைராவுக்கும் நடந்த ஒரு சம்பாஷனையைக் குறிப்பிடுகிறார். ஆயிஷா அபூஹீரைராவிடம் கூறினார். நாங்கள் கேட்டிராத ஹதீஸ்களை எல்லாம் நீ நபி கூறியதாக அறிவிக்கிறாய்' அவன் கூறினான்: 'புகாரியின் அறிவிப் பின்படி) நீங்கள் உங்கள் முகம் பார்க்கும் கண்ணாடியிலும், சீப்பிலும் கவனமாக இருந்திருப் பீர்கள்' ஆயிஷா அவனுக்கு பதிலளித்தார், 'நீதான் உன் வயிற்றிலும், பசியிலும் கவனமாக இருந்தாய். உன் பசி உன்னை அலையவைத்தது. நீ அங்குமிங்கும் பிச்சை எடுத்துக் கொண்டு திரிந்தாய், மக்கள் உன்னைக் கண்டு ஒதுங்கிப் போனார்கள், உன்னைப் பைத்தியக்காரன் என்றும் நினைத்தார்கள்.

இப்படிப்பட்ட அபூஹீரைரா அறிவிக்கும் ஹதீஸ்களைப் பதிவு செய்த முஸ்லிம், புகாரி போன்ற வர்களை மரியாதைக் குரியவர்கள் என்றெண்ணுவது அறிவுடைமை ஆகுமா? அவற்றை மார்க்க ஆதாரம் என்றெண்ணுவது நியாயமாகுமா?

இன்ஷாஅல்லாஹ்

(தொடரும்)

(ஆ.ர்)

குர்ஆன் வழியில் நம்

# தொடர்புத் தொழுகை

(ஜனவரி இதழின் தொடர்ச்சி)

இப்றாஹிம் நபி தன் இரட்சகரைப் பிரார்த்தித்த போது, அவர் இறைவனிடம் செல்வத்தையோ உடல் நலத்தையோ யாசிக்கவில்லை. அவர் பிரார்த்தித்த போது கேட்டது: "என் இரட்சகரே (ஸலாத்) தொழக்கூடியவர்களில் ஒருவனாக என்னை ஆக்கி வைப்பாயாக" (14:40) இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட மார்க்கக் கடமைகள், உண்மையில் அவர் நமக்குத் தந்த மாபெரும் பரிசாகும். அவை நம் ஆன்மாவின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மிகத் தேவையான ஊட்டமாக அமைகிறது.

இத்தகைய ஆன்ம ஊட்டம் இல்லாதவர்களால் மறுமை நாளில் இறைவன் நேரில் வரும்போது ஏற்படும் மகத்தான சக்தியைத் தாங்கிக் கொள்ள இயலாது.

நம்பிக்கை கொள்வது மட்டும் நம் மீட்சிக்குப் போதுமானதாகாது. நாம், நமது ஆன்மாக்களையும், ஊட்டப்படுத்திக் கொள்ள வேண்டும். (6:158, 10:90-92) மேலும் 15:99 இறைவன் விதித்த மார்க்கக் கடமைகளைப் பேணி நடப்பது நாம் உறுதி கொள்வதற்கு உரிய வழியாகவும் அமைந்துள்ளது என்று கூறுகிறது. **"நீங்கள் உறுதி கொள்வதற்காக உங்கள் இறைவனை வணங்குங்கள்" (15:99)**

இதற்கு முன் அன்றாடத் தொழுகைகளைக் குர்ஆன் ஒளியில் எப்படித் தொழுவது என்பதைக் கண்டோம். இப்போது நாம் ஜீம் ஆக (கூட்டுத்) தொழுகை எவ்வாறு தொழ வேண்டும் என்பதையும் காண்போம்.

**"நம்பிக்கையாளர்களே வெள்ளிக்கிழமைகளில் கூட்டுத் தொழுகை (ஸலாத்துல் ஜீம்ஆ) அறிவிக்கப்பட்டால், நீங்கள் இறைவனை நினைவு கூர்வதற்காக விரைந்து செல்லுங்கள், மேலும் உங்கள் அலுவல்களை நிறுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் அறியக்கூடியவர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு நல்லதாகும்". (62:9)**

இவ்வசனத்திலிருந்து ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், நம்பிக்கை கொண்டவர்கள் அனைவருக்கும் வெள்ளிக் கிழமைக் கூட்டுத் தொழுகை கடமையாக உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். ஜும்ஆத் தொழுகையைத் தொழாமலிருப்பது பெருங்குற்றம் என்றும் புரிந்து கொள்கிறோம். ஜும்ஆத் தொழுகை என்பது குர்ஆனைக் கொண்டு இரண்டு குத்பாக்களும் (உரைகள்) இரண்டு ரக்அத்களையும் (பகுதிகள்) கொண்டதாகவும் நிலை நாட்டப்பட்டுள்ளது.

ஆனால் ஆணாதிக்க மனப்பான்மை கொண்ட அன்றைய அரபிகள் இட்டுக்கட்டிய ஒரு ஹதீஸின் அடிப்படையில் பெண்களுக்கு ஜும்ஆ தொழுகை கடமை இல்லை" என்று இன்றைய முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் நம்பிக்கை கொண்ட பெண்களை ஜும் ஆத் தொழுகையை விட்டு தடுக்கின்றனர். நம்பிக்கை கொண்டவர்களே என்று தான் அவ்வசனத்தில் நம்மை அழைக்கிறார். நம்பிக்கை கொண்ட ஆண்களே, என்று அல்ல!

மேலும் அன்றாடத் தொழுகைகள் '19' என்ற அற்புதக் கணித அமைப்பில் கட்டுப்பட்டதாக உள்ளது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் ஜும்ஆத் தொழுகையில் இரண்டு ரக்அத்துக்கள் (பகுதிகள்) மட்டும் தானே உள்ளது. இது எப்படி '19'ல் கட்டுப்படும் என்று சிலர் நினைக்கக் கூடும். ஜும்ஆத் தொழுகையும் '19'ல் கட்டப்பட்டு உள்ளது என்பதற்கான ஆதாரங்களைக் கீழே தந்துள்ளோம்!

இப்பொழுது, நாம் ஒரு வாரத்தின் ஒவ்வொரு நாட்களையும் எடுத்துக்கொள்வோம். (சனி முதல் வெள்ளி வரை, வெள்ளிக்கிமைதான் முதலில் வரவேண்டும் என்பவர்கள் பொறுமையாகத் தொடர்ந்து படிக்கவும். அது பின்னால் வருகிறது) பின் ஒவ்வொரு நாளுக்கும் உள்ள ரக்அத்களை எழுதினால் வரும் எண் 19ன் பெருக்குத் தொகை ஆகும்!

| ச | ஞா | தி | செ | வி | வெ |
|---|---|---|---|---|---|
| 17 | 17 | 17 | 17 | 17 | 15 = 19 X... |

2. இப்பொழுது இந்த நீண்ட எண்ணில் ஒவ்வொரு நாளும் அது வாரத்தின் எத்தனையாவது நாள் என்பதைக் குறிப்பிடுவோம். அந்த எண்ணும் 19ன் பெருக்குத் தொகையே ஆகும்.

| ச | ஞா | தி | செ | வி | வெ |
|---|---|---|---|---|---|
| 117 | 217 | 317 | 417 | 617 | 715 = 19 X... |

3. மேற்கண்ட அட்டவணையில் 17 என்ற ரக்அத்களின் மொத்த எண்ணிக்கையை எழுதுவதற்குப் பதில் வாரத்தின் மற்ற நாட்களுக்கு தனித்தனியாக 24434 என்றும் வெள்ளிக்கிழமைக்கு 22434 என்றும் எழுதினால் அந்த எண்ணும் 19ன் பெருக்கு தொகை ஆகும்.

| ச | ஞா | தி | செ | வி | வெ |
|---|---|---|---|---|---|
| 24434 | 24434 | 24434 | 24434 | 24434 | 22434 = 19 X... |

4. இப்பொழுது இரண்டாம் எண்ணிட்ட அட்டவணையைப் போல மீண்டும் செய்வோம். ஆனால் இம்முறை வெள்ளியை முதல் நாளாகக் கருதிக்

கொள்வோம்! அதுவும் 19ன் பெருக்குத் தொகையாகவே அமைந்துள்ளது! இவ்வாறு இரு விதத்திலும் தொழுகையின் ரக்அத்கள் '19'ன் கட்டமைப்பில் அமைந்திருப்பது தற்செயலாக நிகழ்ந்திருக்க முடியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தற்செயல் இல்லையென்றால் எல்லாம் அறிந்த இறைவனைத் தவிர வேறுயாரால் இவ்விதம் அமைத்திருக்க முடியும்?

| வெ | ச | ஞா | தி | செ | பு | வி |
|---|---|---|---|---|---|---|
| 115 | 217 | 317 | 417 | 517 | 617 | 717 = 19 X... |

5. இப்பொழுது 3ம் எண்ணிட்ட அட்டவணையை நாம் வெள்ளியை முதல் நாளாகக் கொண்டு அமைத்தால் அவ்வெண்ணும் 19ன் பெருக்குத் தொகையே!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22434 | 24434 | 24434 | 24434 | 24434 | 24434 | 24434 = 19 X... |

நீண்ட எண்களை வகுக்கக் கூடிய கால்குலேட்டரிலோ அல்லது கம்ப்யூட்டரிலோ சரிபார்த்துக் கொள்ளவும் முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல்களனைத்திலும் இருந்து தொழுகையின் ரக்அத்துகளின் எண்ணிக்கை சிதைத்து விட முடியாதபடி இறைவனால் பாதுகாக்கப்பட்டு நிலைநாட்டப்பட்டு வந்திருப்பதையும், நவீன காலத்திற்கு ஏற்ப 19-ன் அடிப்படையிலும் அதற்கான ஆதாரங்களை இறைவன் ஏற்கெனவே அமைத்திருக்கிறார் என்பதையும் அறிகிறோம். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று அறிந்திருக்கும் இன்றைய மக்களுக்கு நிச்சயம் அற்புதமான ஆதாரங்கள் இவை அல்பகறா அத்தியாயத்தின் 239 கூறுவது.

"அசாதாரண சந்தர்ப்பங்களில் நீங்கள் நடந்து கொணடோ, வாகனத்திலமார்ந்தோ தொழுது கொள்ளலாம். ஆயினும் நீங்கள் பாதுகாப்புப் பெற்றவுடன் இறைவன் நீங்கள் அறியாமல் இருந்ததை அறிவித்துத் தந்ததைப் போல அவரை நினைவு கூருங்கள்" (2:239)

இவ்வசனத்தின் அடிப்படையில் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் கூட நாம் நடந்து கொண்டோ வாகனத்திலமர்ந்து கொண்டோ தொழ வேண்டும் என்பதை அறிகிறோம். ஏனெனில் இறைவன் கூறுகிறார்: "நிச்சயமாகத் தொழுகை நேரங் குறிப்பிடப்பட்ட. கடமையாக உள்ளது" (4:103)

அந்நிஸா (4) அத்தியாயத்தின் 101-102 வசனங்கள் கூறுவது: போர் சமயத்தில் நீங்கள் பிரயாணம் செய்யும்போது நிராகரிப்பவர்கள் உங்களைத்

தாக்கக் கூடும் என்று அஞ்சினால் உங்களுடைய தொடர்புத் தொழுகைகளை சுருக்கிக் கொள்வதில் உங்கள் மீது எந்தத் தவறுமில்லை. நிச்சயமாக நிராகரிப்பவர்கள் உங்களுக்குக் கடுமையான பகைவர்கள் ஆவர்.

நீர் அவர்களுடன் இருந்து தொழுகையை (இமாமாக) நடத்தும்போது, சிலர் உங்களுக்குக் காவலாக இருக்கட்டும். நீர் சிரவணக்கம் செய்யும்போது அவர்கள் ஆயுதங்களைத் தாங்கி உங்கள் பின்னால் நிற்கட்டும். பின்னர் தொழாமலிருந்த மற்றவர்கள் வந்து உம்முடன் சேர்ந்து தொழவேண்டும். உம்முடன் தொழுதவர்கள் இப்போது ஆயுதம் தாங்கி காவலுக்கு நிற்கட்டும்..."

மேற்கண்ட வசனத்தில் இருந்து போர்க்காலங்களில் மட்டுமே நாம் தொழுகையைச் சுருக்கித் தொழ அனுமதி உள்ளது. மற்ற நேரங்களில் அல்ல என்பது தெளிவாகிறது. மேலும் ஒருவர் (இமாமாக) தொழுகையை நடத்துவதற்கும் ஆதாரம் கூறப்படுகிறது. தொழுகையைச் சுருக்கித் தொழுவது எவ்வாறு என்றும் விவரிக்கப்பட்டுள்ளது.

சாதாரண பிரயாணங்களின் போது கூட ஜம்உ, (இருவேளைத் தொழுகையை சேர்த்துத் தொழுவது) கஸர் (சுருக்கித் தொழுதல்) என்று ஹதீஸ்களின் அடிப்படையில் இன்றைய முஸ்லிம் சமுதாயம் தொழுகைகளைச் சிதைத்து வைத்திருப்பதும், அது குர்ஆனுக்கு முரணானது, இறை அங்கீகாரம் இல்லாதது என்பதும் இங்கே நாம் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள்.

மேலும் போதையில் இருக்கும் போது தொழக்கூடாது, ஏனெனில் நாம் என்ன கூறுகிறோம் என்பதை அறிந்து கொண்டே நாம் தொழ வேண்டும் என்பதை 4:43 தெளிவு படுத்துகிறது.

மேலும், மரண சாசனத்திற்கு சாட்சி சொல்வதற்கு முன் தொழுகையை முடித்துக் கொண்டே சாட்சி சொல்ல வேண்டும் என்பதை 5:106 கூறுகிறது.

மேலும் நிராகரிப்போரின் தொழுகை பற்றி இறைவன் 4:142, 9:54, 74:43, 75;31, 77:48, 107:4-5 ஆகிய வசனங்களில் விவரிக்கிறார் பார்த்துப் படிப்பினை பெறுவோம்.

நம்பிக்கையாளர்களின் குணநலன்களில் தொழுகையும் ஒன்று என்று ஏராளமான வசனங்களில் இறைவன் கூறுகிறார். அவற்றில் சில 2:3, 177, 238, 4:162, 6:92; 7:170, 8:3; 9:5, 11,18,71; 13:22; 20:14; 22:35; 78, 41; மற்றும் பல.

நம்பிக்கையாளர்கள் தங்கள் பிள்ளைகளையும், குடும்பத்தாரையும்

தொழும்படி ஏவ வேண்டும் என்பதை 19:31, 55; 20; 132; 31:17 ஆகிய வசனங்கள் அறிவுறுத்துகின்றன.

இறைவனிடம் தொழுகையைக் கொண்டு உதவி தேட வேண்டும் என்பதை 2:45, 153; 5:12,55, 29:45 ஆகிய வசனங்கள் கூறுகின்றன.

மானக்கேடான, பாவமான காரியங்களை விட்டுத் தொழுகை நம்மைக் காக்கும் என்பதை 29:45 கூறுகிறது.

தொழுகை பற்றி இவ்வளவு விரிவாக இறைவன் கூறியிருந்தும், தொழுகை பற்றிய விவரங்கள் குர்ஆனில் கூறப்படவில்லை. எனவே ஹதீஸ்களைப் பின்பற்றியே ஆக வேண்டும் என்று கூறுபவர்கள் இறைவனை, அவர் வார்த்தைகளை மறுப்பவர்களின்றி வேறு யார்?

வாசகர்கள் தொழுகை பற்றிய தங்கள் கேள்விகளை நமக்கு எழுதினால் இன்ஷா அல்லாஹ் அவை குர் ஆன் ஒளிகொண்டு தெளிவுபடுத்தப்படும்

(முற்றும்) ஆசிரியர்

## அற்புதக் கணிதக் கட்டமைப்பில்

# அல்குர்ஆன்

## இறைவனின் முத்திரை

## 19

சென்ற இதழ்களில் அல்குர்ஆன் மனித சக்திக்கு அப்பாற்பட்டு ஓர் அற்புதக் கணிதக் கட்டமைப்பில் ஆக்கப்பட்டிருப்பதையும், அக்கட் டமைப்பு குர்ஆனிலுள்ள (ஒவ்வொரு) எல்லா அம்சங்க ளையும் பாதுகாப்பதையும் அறிந்து கொண்டோம். இறைவன் தன் இறுதித் திருமறையின், 'அல் முத்தஸ்ஸிர்' (அத்.74) அத்தியாயத்தின் வசனங்களில் கூறுவது போலவே '19' என்ற தனிச்சிறப்பு மிக்க எண்ணால் அமைக்கப்பட்ட இவ்வற்புதக் கட்டமைப்பு இறைவனை நம்ப மறுப்பவர்களுக்கு ஒரு சோதனை யாகவும், நம்பிக்கைக் கொண்டோரின் நம்பிக்கையை அதிகப் படுத்துவதாகவும், வேதங் கொடுக்கப் பட்டோருக்கும் நம்பிக்கை யாளர்களுக்கும் உறுதியை (யகீனை) கொடுப்பதாகவும், சந்தேகங்களை அறவே நீக்கக் கூடியதாக அமைந்திருப்பதையும்,

(74:31) நிச்சயமாக அது ஒரு மாபெரும் நிகழ்வாகவும் (74:35) நினைவூட்டலாகவும் அமைந் திருப்பதையும் (74:31) கண்டோம். தொடர்ந்து அவ்வற்புதத்தின் வேறு சில பகுதிகளை இவ்விதழில் காண்போம்.

அல்குர் ஆனைப் போலவே, அதன் அற்புதக் கட்டமைப்பும் அடிப்படையில் மிக எளிமை யானதாகவும் , தெளிவானதாகவும், அதே நேரத்தில் ஆழ்ந்த அறிவும், சிந்தனையும், கருவிகளும், பொறுமையும் தேவைப்படக் கூடியதாகவும் அமைந்துள்ளது!

உதாரணமாக, குர்ஆனில் 'ஸலாத்' (தொடர்புத் தொழுகை) என்ற வார்த்தை '67 முறை இடம்பெறுகிறது. இவ்வார்த்தை இடம்பெறும் எல்லா வசனங்களின் அத்தியாய எண்களையும் (ஸீரா ) வசன எண்களையும் கூட்டினால், அவற்றின் மொத்த எண்ணிக்கை 4674! அதாவது 19x246

அது போலவே நோன்பு பிடிக்க ஏவும் கட்டளைகள் 2:183, 184, 185, 187, 196, 4:92, 5:89, 95, 33:35,35 மற்றும் 58:4. இவ்வெண்களின் கூட்டுத் தொகை 1387! அதாவது 19x73. இங்கே 33:35 எண்ணிட்ட வசனத்தில் இருமுறை நோன்பு கூறப்படுகிறது என்பது கவனிக் கத்தக்கது. ஒன்று நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கு, மற்றொன்று நம்பிக்கை கொண்ட பெண்களுக்கு! எனவே அதை இருமுறை கணக்கில் கொண்டால் மட்டுமே அவ்வெண் 19ஆல் வகுபடும். குர் ஆனில் உள்ள ஒவ்வொரு எண்ணும் அதனை இறக்கி அருளிய இறைவனால் அமைக்கப்பட்டதே என்பதை நம்பிக்கை யாளர்களுக்கு அறிவிக்கும் விதமாய் இவ்வற்புதம் உள்ளது.

ஆனால், ஜகாத் தர்மம் 2:43,83, 110,177,277; 4:77,162; 5:12,55; 7:156, 9:5, 11, 18, 71; 18:81, 19:13, 31, 55; 21:73, 22:41, 78; 23:4, 24:37, 56, 27:3; 30:39, 31:4, 33:33, 41:7, 58:13, 73:20 மற்றும் 98:5 ஆகிய வசனங்களில் கூறப் படுகிறது. இவ்வெண்களின் கூட்டுத் தொகை 2395. இது 19ன் பெருக்குத் தொகையல்ல! ஆம் 1 கூடுகிறது.

எனவே நிராகரிப்போர் அவசரப்பட்டு மகிழ்ச்சியடைவர். ஆனால் அவர்களின் மகிழ்ச்சி நீடிக்கக் கூடியதல்ல.

மேலும் ஹஜ் யாத்திரை 2:189, 196, 197; 9:3 மற்றும் 22:27 ஆகிய வசனங்களில் இடம்பெறுகின்றது. இவ்வெண்களின் கூட்டுத் தொகை 645. இவ்வெண்ணும் '19'ன் பெருக்குத் தொகை அல்ல! 1 குறைகிறது!

ஜகாத் தர்மமும், ஹஜ் யாத்திரையும் பொருளாதாரம் சார்ந்த கடமைகள்! எனவே ஜகாத் தர்மம் பற்றிய அத். எண்களின் மற்றும் வசனங்களின் கூட்டுத் தொகையில் 1 கூடுகிறது. ஹஜ் பற்றிய வசனங்களின் கூட்டுத் தொகையில் 1 குறைகிறது! +1-1=0! எனவே ஹஜ் மற்றும் ஜகாத் ஆகிய இரு கடமைகளும்

இறைவனால் இங்கே சேர்த்து வைக்கப்பட்டதை அறிந்து, நம்பிக்கையாளர்களின் உள்ளங்கள் பூரிக்கிறது! நிராகரிப்போரின் உள்ளங்களோ குமைகிறது!

இது போல மற்றொன்றும் பார்ப்போம். குர்ஆன் முழுதும் அற்புதக்கட்டமைப்பில் அமைக் கப்பட்டிருப்பது போலவே குர்ஆன் என்ற வார்த்தையும் குர்ஆனில் 19ன் பெருக்குத் தொகையில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நியாய மானதுதான் அல்லவா? ஆனால் முழு குர்ஆனிலும் 'குர்ஆன்' என்ற வார்த்தை 58 முறை இடம்பெறுகிறது. ஆயினும் இங்கும் நிராகரிப்போரின் மகிழ்ச்சி நீடிக்கப் போவதில்லை. இதில் ஒளிந் திருக்கும் அற்புதம் என்ன தெரியுமா? அந்த 58' குர் ஆன் என்ற வார்த்தைகளில் 10:15ல் இடம்பெறும் 'கைரி ஹாதல் குர்ஆன்' - 'இது அல்லாத குர்ஆன் என்ற வாசகமும் ஒன்று! எனவே இதைக் கணக்கில் கொள்ளக் கூடாது. ஏனெனில் இந்தக் குர் ஆனின் மீதுதான் 19' உள்ளது! (74:30). இது அல்லாத குர்ஆனில் அல்ல! 10:15ல் இடம்பெறும் இது அல்லாத குர்ஆன் என்பது கணக்கிலிருந்து நீக்கப்பட்டால் குர் ஆன் முழுதும் இடம்பெறும் குர்ஆன் என்ற சொல் சரியாக 57' முறை இடம் பெறுகிறது! அதாவது 19x3!

இங்கே தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் ஆகியவற்றைக் குறிப்பிடும் வசனங்கள் குறித்த சில தகவல்களை அறிந்து வியந்தோம். இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் நான்கைப் பற்றிய அற்புதங்களை காண்பதுடன் அவற்றில் முதன்மை யானதான ஷஹாதத் குறித்தும் சில விஷயங்களைப் பார்ப்போம். சரியான ஷஹாதத் (சாட்சியம்) 3:18ல் தெளிவாக ஒரு முறைக்கு இரு முறையாக்க கூறப்படுகிறது. அது **'லா இலாஹ இல்லா ஹீவ'** (அவரைத்தவிர வேறு யாரும் கடவுள் இல்லை) என்பதாகும். இங்கே 'ஹீவ' - அவர் என்பது அகிலங்களை எல்லாம் படைத்துப் பரிபாலித்து வரும் அந்த ஒரே இறைவனையே குறிக்கும் என்பதை மனிதர்கள் அனைவரும் அறிய, உணர முடியும் இம் முக்கிய வாசகம் குர் ஆனில் '19' அத்தியாயங்களில் கூறப்படுவது மட்டுமல்ல! இவ்வாசகம் இடம்பெறும் எல்லா வசனங்களின் அத்தியாய எண்களையும், வசன எண்களையும், அவற்றில் இவ்வாசகம் இடம்பெறும் எண்ணிக்கையையும் கூட்டினால் அவற்றின் கூட்டுத் தொகை 2128! அதாவது 19x112! கட்டுரையின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை யைப் பார்க்கவும்.

அறிவுள்ள எல்லா மனிதர்களும் ஒப்புக் கொள்ளும் மிகச் சரியான கணக்கியலின் துல்லியமான விதிகளின்படி, மேலே கூறப்பட்ட அற்புதக் கட்டமைப்பில் குர்ஆனில் உள்ள 'ஷஹாதத், தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் ஆகிவை பற்றிக் குறிப்பிடும் வசனங்களில் ஏதேனும் ஒன்றை இடம்

**(தொடர்ச்சி 27 பக்கம்)**

# அல்-குர்ஆன் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழி பெயர்ப்பும், அதன் தமிழாக்கமும்

## Sura 2: The Heifet (Al-Baqarah)

## அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)

وَاتَّقُوْا يَوْمًا لَّا تَجْزِىْ نَفْسٌ عَنْ نَّفْسٍ شَيْـًٔـا وَّلَا يُقْبَلُ مِنْهَا شَفَاعَةٌ وَّلَا يُؤْخَذُ مِنْهَا عَدْلٌ وَّلَا هُمْ يُنْصَرُوْنَ

48. Beware of the day when no soul can avail another soul, no intercession will be accepted, no ransom can be paid, nor can anyone be helped.

48. எந்த ஆத்மாவும் மற்றொரு ஆத்மாவுக்கு உதவ இயலாத, பரிந்துரை எதுவும் ஏற்றுக் கொள்ளப்படாத, ஈடு எதுவும் செலுத்தப்பட இயலாத, அன்றி எவரொருவரும் உதவப்பட இயலாத அந்நாள் குறித்து எச்சரிக்கையுடன் இருந்து கொள்ளுங்கள்.

وَاِذْ نَجَّيْنٰكُمْ مِّنْ اٰلِ فِرْعَوْنَ يَسُوْمُوْنَكُمْ سُوْٓءَ الْعَذَابِ يُذَبِّحُوْنَ اَبْنَآءَكُمْ وَيَسْتَحْيُوْنَ نِسَآءَكُمْ وَفِىْ ذٰلِكُمْ بَلَآءٌ مِّنْ رَّبِّكُمْ عَظِيْمٌ

49. Recall that we saved you from Pharaoh's people who inflicted upon you the worst persecution, slaying your sons and sparing your daughters. That was an exacting test from your Lord.

49. உங்களுடைய மகன்களைக் கொன்று விட்டு, உங்களுடைய மகள்களை விட்டு வைத்து, உங்கள் மீது மோசமான வன்கொடுமையைக் கொண்டு துன்புறுத்திய ஃபேரோவின் சமூகத் தாரிடமிருந்து, உங்களை நாம் காப்பாற்றி னோம் என்பதை நினைவு கூர்ந்திடுங்கள், அது உம்முடைய இரட்சகரிட மிருந்து ஒரு கடினமான சோதனையாக இருந்தது.

وَاِذْ فَرَقْنَا بِكُمُ الْبَحْرَ فَاَنْجَيْنٰكُمْ وَاَغْرَقْنَآ اٰلَ فِرْعَوْنَ وَاَنْتُمْ تَنْظُرُوْنَ

50. Recall that we parted the sea for you; we saved you and drowned Pharaoh's people before your eyes.

50. உங்களுக்காகக் கடலை நாம் பிளந்ததை நினைவு கூர்ந்திடுங்கள்; உங்களை நாம் காப்பாற்றியதோடு உங்கள் கண்களின் முன்னரே ஃபேரோவின் சமூகத்தாரை மூழ்கடித்தோம்.

وَاِذْ وٰعَدْنَا مُوْسٰٓى اَرْبَعِيْنَ لَيْلَةً ثُمَّ اتَّخَذْتُمُ الْعِجْلَ مِنْۢ بَعْدِهٖ وَاَنْتُمْ ظٰلِمُوْنَ

51. Yet, when we summoned Moses for forty nights, you worshiped the calf in his absence, and turned wicked.*

51. இருப்பினும், நாற்பது இரவுகளை முன்னிட்டு மோஸஸை நாம் அழைத்த போது, அவர் இல்லாத சமயத்தில் கன்றுக்குட்டியை நீங்கள் வழிபட்டீர்கள், மேலும் தீயவர்களாக மாறி விட்டீர்கள்.*

ثُمَّ عَفَوْنَا عَنْكُمْ مِّنْ بَعْدِ ذٰلِكَ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

وَاِذْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ وَالْفُرْقَانَ لَعَلَّكُمْ تَهْتَدُوْنَ

وَاِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖ يٰقَوْمِ اِنَّكُمْ ظَلَمْتُمْ اَنْفُسَكُمْ بِاتِّخَاذِكُمُ الْعِجْلَ فَتُوْبُوْآ اِلٰى بَارِئِكُمْ فَاقْتُلُوْٓا اَنْفُسَكُمْ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ عِنْدَ بَارِئِكُمْ فَتَابَ عَلَيْكُمْ اِنَّهٗ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ

وَاِذْ قُلْتُمْ يٰمُوْسٰى لَنْ نُّؤْمِنَ لَكَ حَتّٰى نَرَى اللّٰهَ جَهْرَةً فَاَخَذَتْكُمُ الصّٰعِقَةُ وَاَنْتُمْ تَنْظُرُوْنَ

52. Still, we pardoned you thereafter that you may be appreciative.

53. Recall that we gave Moses scripture and the statute book, that you may be guided.

***Kill Your Ego****

54. Recall that Moses said to his people, "O my people, you have wronged your souls by worshiping the calf. You must repent to your Creator. You shall kill your egos. This is better for you in the sight of your Creator." He did redeem you. He is the Redeemer, Most Merciful.*

***Physical Evidence****

55. Recall that you said, "O Moses, we will not believe unless we see God, physically." Consequently, the lightning struck you, as you looked.*

52. என்றாலும், நீங்கள் நன்றியுடன் இருக்கும் பொருட்டு அதன்பின்னரும் நாம் உங்களைப் பிழை பொறுத் தோம்.

53. நீங்கள் வழி நடத்தப்பட்டவர்களாக இருக்கும் பொருட்டு, மோஸஸுக்கு வேதத்தையும் சட்டப் புத்தகத்தையும் நாம் கொடுத்தோம் என்பதை நினைவு கூர்ந்திடுங்கள்.

**உங்கள் அகந்தையைக் கொல்லுங்கள்***

54. மோஸஸ் தன் சமூகத்தாரிடம் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள், என் சமூகத்தாரே, கன்றுக்குட்டியை வழிபட்டதன் மூலம் உங்களுடைய ஆத்மாக்களுக்கு நீங்கள் தீங்கிழைத்துக் கொண்டு விட்டீர்கள். நீங்கள் உங்களுடைய படைப்பாளரிடம் பாவத்திற்கு வருந்தியே ஆக வேண்டும். உங்களுடைய அகந்தைகளை நீங்கள் கொல்ல வேண்டும். இதுவே உங்களுடைய படைப்பாளரின் பார்வையில் உங்களுக்குச் சிறந்ததாகும். அவர் உங்களை மீட்டுக் கொள்ளவே செய்தார். அவர்தான் மீட்பவர், மிக்க கருணையாளர்.*

**கண்கூடான ஆதாரம்***

55. மோஸஸே, கடவுள்-ஐ நாங்கள் பகிரங்கமாக கண்டாலே அன்றி, நாங்கள் நம்பிக்கை கொள்ள மாட்டோம், என்று நீங்கள் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள். அதன் விளைவாக, நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தபோதே, மின்னல் உங்களைத் தாக்கியது.*

ثُمَّ بَعَثْنٰكُمْ مِّنْۢ بَعْدِ مَوْتِكُمْ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

56. We then revived you, after you had died, that you may be appreciative.

56. நீங்கள் மரணித்து விட்டதை அடுத்து, உடனே நாம் உங்களை உயிர்ப்பித்தோம், நீங்கள் நன்றியுடையவர்களாக இருக்கும் பொருட்டு.

وَظَلَّلْنَا عَلَيْكُمُ الْغَمَامَ وَاَنْزَلْنَا عَلَيْكُمُ الْمَنَّ وَالسَّلْوٰى كُلُوْا مِنْ طَيِّبٰتِ مَا رَزَقْنٰكُمْ وَمَا ظَلَمُوْنَا وَلٰـكِنْ كَانُوْاۤ اَنْفُسَهُمْ يَظْلِمُوْنَ

57. We shaded you with clouds (in Sinai), and sent down to you manna and quails: "Eat from the good things we provided for you." They did not hurt us (by rebelling); they only hurt their own souls.

57. (ஸினாயில்) மேகங்களைக் கொண்டு உங்களுக்கு நாம் நிழலிட்டோம், மேலும் மன்னாவையும் காடைகளையும் உங்களுக்கு இறக்கி அனுப்பினோம்: நாம் உங்களுக்கு வழங்கிய நல்ல பொருள்களில் இருந்து உண்ணுங்கள். (கலகம் செய்ததன் மூலம்) அவர்கள் நமக்குத் தீங்கிழைக்கவில்லை; அவர்கள் தங்களுடைய சொந்த ஆத்மாக்களுக்கே தீங்கிழைத்துக் கொள்கின்றனர்.

### *Lack of Confidence in God : They Refuse to Enter Jerusalem*

### இறைவனின் மேல் நம்பிக்கைக் குறைவு: அவர்கள் ஜெருசலத்தில் நுழைய மறுத்தனர்.

وَاِذْ قُلْنَا ادْخُلُوْا هٰذِهِ الْقَرْيَةَ فَكُلُوْا مِنْهَا حَيْثُ شِئْتُمْ رَغَدًا وَّادْخُلُوا الْبَابَ سُجَّدًا وَّقُوْلُوْا حِطَّةٌ نَّغْفِرْ لَـكُمْ خَطٰيٰكُمْ وَسَنَزِيْدُ الْمُحْسِنِيْنَ

58. Recall that we said, "Enter this town, where you will find as many provisions as you like. Just enter the gate humbly, and treat the people nicely. We will then forgive your sins, and increase the reward for the pious."

58. நாம் கூறியதை நினைவு கூர்ந்திடுங்கள், நீங்கள் எத்தனை வாழ்வாதாரங்களை விரும்புகின்றீர்களோ அத்தனையையும் அங்கே காணக் கூடிய இந்த நகருக்குள் நுழையுங்கள், அதன் வாயிலில் எளிமையுடன் நுழையுங்கள், மேலும் மக்களை நல்ல முறையில் நடத்துங்கள். அப்போது நாம் உங்களுடைய பாவங்களை மன்னிப்போம், மேலும் பக்திமான்களுக்குரிய வெகு மதியை அதிகரிப்போம்.

فَبَدَّلَ الَّذِيْنَ ظَلَمُوْا قَوْلاً غَيْرَ الَّذِىْ قِيْلَ لَهُمْ فَاَنْزَلْنَا عَلَى الَّذِيْنَ ظَلَمُوْا رِجْزًا مِّنَ السَّمَآءِ بِمَا كَانُوْا يَفْسُقُوْنَ

59. But the wicked among them carried out commands other than the commands given to them. Consequently, we sent down upon the transgressors condemnation from the sky, due to their wickedness.

59. ஆனால் அவர்களிலுள்ள தீயவர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளை விடுத்து மற்றக் கட்டளைகளைச் செயல்படுத்தினர். அதன் விளைவாக, அவர்களுடைய தீயதன்மையின் காரணத்தால், வரம்புமீறுபவர்களின் மீது விண்ணிலிருந்து தண்டனையை நாம் இறக்கி அனுப்பினோம்.

وَاِذِ اسْتَسْقٰى مُوْسٰى لِقَوْمِهٖ فَقُلْنَا اضْرِبْ بِّعَصَاكَ الْحَجَرَ فَانْفَجَرَتْ مِنْهُ اثْنَتَا عَشْرَةَ عَيْنًا قَدْ عَلِمَ كُلُّ اُنَاسٍ مَّشْرَبَهُمْ كُلُوْا وَاشْرَبُوْا مِنْ رِّزْقِ اللّٰهِ وَلَا تَعْثَوْا فِى الْاَرْضِ مُفْسِدِيْنَ

### *More Miracles*

60. Recall that Moses sought water for his people. We said, "Strike the rock with your staff." Whereupon, twelve springs gushed out therefrom. The members of each tribe knew their own water. Eat and drink from God's provisions, and do not roam the earth corruptingly.

### *Footnote*

* 2:51 This incident reflects the humans' idolatrous tendency. Despite the profound miracles, Moses' followers worshiped the calf in his absence, and Moses ended up with only two believers (5:23). As pointed out in the Introduction, the humans are rebels whose egos are their gods.

* 2:54 It is the ego that led to Satan's fall. It is the ego that caused our exile to this world, and it is the ego that is keeping most of us from redemption to God's Kingdom.

* 2:55 It is noteworthy that the word "GOD" in this verse is the 19th occurrence, and this is the verse where the people demanded "Physical evidence". The Quran's mathematical code, based on the number 19, provides such physical evidence. Note also that 2+55=57=19x3

### அதிகமான அற்புதங்கள்

60. மோஸஸ் தன் சமூகத்தாருக்காகத் தண்ணீரைத் தேடியதை நினைவு கூர்ந்திடுங்கள். நாம் கூறினோம், உம் முடைய கைத்தடியால் பாறையை அடிப்பீராக. உடனே, பன்னிரண்டு ஊற்றுகள் அதிலிருந்து பொங்கி எழுந்தன. ஒவ்வொரு குலத்தின் அங்கத்தினர்களும் தங்களுக்குரிய தண்ணீரை அறிந்திருந்தனர். கடவுள்-ன் வாழ்வாதாரங்களில் இருந்து உண்ணுங்கள் மேலும் பருகுங்கள், அத்துடன் சீர்கெடுக்கும் விதமாகப் பூமியைச் சுற்றித் திரியாதீர்கள்.

### பின்குறிப்பு

* 2:51, இந்நிகழ்வு மனிதர்களின் இணைவைக்கும் மனப்பான்மையை பிரதிபலிக்கிறது தீர்க்கமான அற்புதங்கள் கொடுக்கப்பட்ட பின்னரும் மூஸாவைப் பின்பற்றுவோர் அவர் இல்லாத போது காளைக்கன்றை வணங்கினர். மேலும் மூஸா இரண்டு நம்பிக்கையாளர்களுடன் மட்டும் விடப்பட்டார் (5.23)

* 2:54 அகந்தையே ஷைத்தானின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது. அகந்தையே நாம் இவ்வுல கிற்கு வெளியேற்றப்படக் காரணமானது. மேலும் அகந்தையே நம்மில் பெரும்பாலோர் இறைவனின் சாம்ராஜ்யத்திற்கு மீட்கப்படுவதைத் தடுக்கிறது.

* 2:55 இவ்வசனத்தில் இடம்பெறும் 'அல்லாஹ்' என்ற வார்த்தை (குர்ஆனின் ஆரம்பத்திலிருந்து) 19 வது முறையாக இடம்பெறுவது கவனிக்கத்தக்கது. மேலும் இவ்வசனத்தில்தான் மக்கள் கண் கூடான ஆதாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். 19 என்ற எண்ணின் அடிப்படையிலான அற்புதக் கணிதக் குறியீடு அத்தகைய கண்கூடான ஆதாரத்தைத் தருகிறது. மேலும் கவனிக்க 2+55-57=19X3.

**(22ம் பக்கத்தொடர்ச்சி)**

மாற்றினாலோ, நீக்கினாலோ, அல்லது சேர்த்தாலோ இவ்வற்புதக் கட்டமைப்பு அதனை உடனே காட்டிக் கொடுத்து விடும். எந்த ஒரு சிறு மாற்றம் செய்தாலும், '19' என்ற இறைவனின் முத்திரைக் கையொப்பம் அதனைத்தனியே நிறுத்தி, பளிச்சென்று வெளிக் காட்டும். இதன் மூலம் குர்ஆனில் உள்ள வசனங்களுக்கு எண்கள் இட்டவரும் இறைவன்தான் என்பதை நல்லறிவுடையோர் உறுதி செய்து கொள்ள முடியும்.

மேலே நாம் கூறியவை அனைத்தும் எளிமையான வகையைச் சேர்ந்த தகவல்களாகும். இவற்றை நாம் எளிதாக விளங்கி, சரிபார்த்துக் கொள்ளவும் முடியும்.

தொடர்ந்து விளங்கிக் கொள்ள சற்று ஆழ்ந்த சிந்தனை, அறிவு, பொறுமை, மற்றும் சரிபார்த்துக் கொள்ள கணினிகளின் உதவி ஆகியவை தேவைப்படும் வகையில் அமைந்துள்ள அற்புதங்களில் ஒன்றைக் காண்போம். இது, குர் ஆனில் உள்ள அனைத்து வசனங்களையும் உறுதிப்படுத்தும் விதத்தில் அமைந்த அற்புதமாகும்.

நாம் குர்ஆனில் உள்ள ஒவ்வொரு அத்தியாயத்தின் மொத்த வசனங்களை முதலில் எழுதி, தொடர்ந்து அவ்வத்தியாயத்தின் ஒவ்வொரு வசனங்களையும் எழுதுவோம். இதன்படி 7 வசனங்கள் கொண்ட அத் 1 இவ்வாறு எழுதப்படும். 71234567 இதனைத் தொடர்ந்து இவ்விதமாகவே 286 வசனங்கள் கொண்ட 2வது சூராவை (அத்) பின்வருமாறு எழுதுவோம். 286123456.... 283, 284, 285, 286. இங்கே நாம் என்ன செய்கிறோம் என்றால் குர்ஆனில் உள்ள அனைத்து வசன எண்களைக் கொண்டு, ஒரு நீண்ட எண்ணை அமைத்துக் கொண்டு வருகிறோம். முதலில் மொத்த வசனங்களின் எண்ணிக்கை. தொடர்ந்து அதன் ஒவ்வொரு வசன எண்களையும் அருகருகே அமைத்து ஒரு நீண்ட எண்ணை அமைக்கிறோம்.

இவ்விதம் தொடர்ந்து குர்ஆனில் உள்ள 114 அத்தியாயங்களுக்கும் செய்து குர்ஆனில் உள்ள அனைத்து வசனங்களின் எண்களும் எழுதப் பட்டால் கடைசி இரு அத்தியா யங்களான 113, 114 ஆகியவையின் வசன எண்கள் முறையே 5123456123456 என்று வந்து அந்த நீண்ட எண் முடிவடையும். இவ்விதம் குர்ஆனில் உள்ள அனைத்து வசன எண்களையும் அமைத்து எழுதப்பட்டால், அந்த நீண்ட எண் 12692 இலக்கங்கள் கொண்டதாக அமையும்.

12692 = 668 x 19!

இது மட்டுமல்ல, அந்த நீண்ட எண்ணும் 19ன் பெருக்குத் தொகையே ஆகும். மிக நீண்ட எண்களை வகுக்கக் கூடிய ஒரு கம்ப்யூட்டர் திட்டம் இந்த நீண்ட எண்ணை 19ன் பெருக்குத் தொகை என்று காட்டியது! இங்கே நாம் கூறியது ஒரு உதாரணம் மட்டுமே. மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத்

கலீபாவின் குர்ஆன் மொழி பெயர்ப்பின் இவ்விதம் குர்ஆனில் உள்ள வசன எண்கள், அவற்றின கூட்டுத் தொகை, ஆகியவை பின் இணைப்பில் கொண்டு அமைக்கப் பட்ட 15 நீண்ட எண்கள் 19ன் பெருக்குத் தொகையாக அமைந்துள்ளதை கண்டு, அறிந்து, பிரமித்து, மனிதனுக்கு சாத்திய மில்லாதவற்றை எல்லாம் தனக்கு சாத்தியமாக்கும் இறைவனின் வல்லமையை நாம் எண்ணிப் பார்க்கிறோம்.

இவ்விதமான தகவல்களில் உள்ள அற்புதங்களை அறிந்து கொள்ள ஆழ்ந்த பொறுமை, சிந்தனை, அறிவு ஆகியவை தேவைப் படுகிறது. எனினும் இவற்றை உணர்ந்து கொள்ள முடிகிற போது ஏற்படுகிற பிரமிப்பு நிச்சயம் 19. இறைவனின் மாபெரும் அற்புதம் தான் என்பதை நம் அனைரையும் உணர வைக்கும்.

இன்ஷா அல்லாஹ்

(தொடரும்)
ஆசிரியர்

## அட்டவணை

| எண் | அத்தியாய எண் | ஷஹாதத் இடம்பெறும் வசனங்கள் | ஷஹாதத் இடம்பெறும் முறைகள் |
|---|---|---|---|
| 1 | 2 | 163,255 | 2 |
| 2 | 3 | 2,6,18,18 | 4 |
| 3 | 4 | 87 | 1 |
| 4 | 6 | 102,106 | 2 |
| 5 | 7 | 158 | 1 |
| 6 | 9 | 31 | 1 |
| 7 | 11 | 14 | 1 |
| 8 | 13 | 30 | 1 |
| 9 | 20 | 8,98 | 2 |
| 10 | 23 | 116 | 1 |
| 11 | 27 | 26 | 1 |
| 12 | 28 | 70,88 | 2 |
| 13 | 35 | 3 | 1 |
| 14 | 39 | 3 | 1 |
| 15 | 40 | 3,62,65 | 3 |
| 16 | 44 | 8 | 1 |
| 17 | 59 | 22,23 | 2 |
| 18 | 64 | 13 | 1 |
| 19 | 73 | 9 | 1 |
| | 507 | 1592 | 29 |

507 + 1592 + 29 = 2128 = 19 X 112!

# நேருக்கு நேர்

பள்ளிக்கூடத்தில் இறுதி வகுப்பு வரை ஒன்றாகப் படித்த அப்துல் ரஹீமும் மன்சூரும் நெருங்கிய நண்பர்கள். 15 ஆண்டுகள் பலப்பல கால மாறுதல்களை வாழ்க்கையில் வ சந்தித்து அனுபவம் பெற்று தங்கள் க 35வது வயதில் மீண்டும் சந்தித்துக் கொள்கின்றனர்.

மன்சூர்: ஸலாமுன் அலைக்கும், நல்லா இருக்கியா?

அப்துல் ரஹீம் : வ அலைக்கும் ஸலாம். ரொம்ப நல்லா இருக்கிறேன். நீ நல்லா இருக்கியா?

மன்சூர் : அல்ஹம்துலில்லாஹ்... சின்ன வயசில நாம ரெண்டு பேரும் எடுத்து கிட்ட லட்சிய வாழ்க்கை வாழனும் கிற வாக்குறுதி ஞாபகம் இருக்கா? இப்ப நீ என்ன செய்யற?

அ. ரஹீம்: நம்மள படைச்ச இறைவனுக்கு பொருத்தமாகவும் நன்றியோடவும் சக மனிதர்களுக்கு பிரயோசனமாகவும் வாழனும் அப்படிங்கற நம்ம வாக்குறுதி தானே! அதை மறக்க முடியுமா? அப்படித் தான் வாழ்ந்து கிட்டிருக்கிறேன். நான் வேலூர் மதரஸாவில் படிச்சு ஸனது வாங்கி ஒரு பள்ளியில இமாமா இருக்கிறேன். சொந்தமா மத்றஸா ஏற்படுத்தி குர்ஆன் ஓதிக் குடுக்கிறேன். நிம்மதியா இருக்கிறேன். சரி உன்னைப் பத்திச் சொல்லு. நீ என்ன செய்யற?

மன்சூர் : ரெண்டு மூனு இடத்தில வேலை செய்தேன். சொந்தமா வியாபாரம் பண்ணினேன். கடைசியா இப்ப பேன்ஸி ஸ்டோர் வெச்சு நடத்தறேன். சில நல்ல நண்பர்களுடன் சேர்ந்து மக்களுக்கு சேவை செய்யறேன். ஒரு மாத பத்திரிக்கையும் நடத்தறோம். இறைவனுக்கு பொருத்தமா வாழ்றதாத் தான் நம்புறேன். மன நிறைவாகவும் சந்தோசமாகவும் இருக்குது.

ரஹீம்: அப்படியா! நான் உன்னைப் பற்றி வேறு விதமாக கேள்விப்பட்டேன்! புதுசு புதுசா இஸ்லாத்திற்கு விரோதமாக நீ சொல்வதாகவும் பத்திரிக்கையில் எழுதுறதாகவும் சொல்கிறார்கள். நீ என்னடாவென்றால் இறைவனுக்குப் பொருத்தமாக வாழ்றேன். மனித னுக்கு சேவை செய்றேன், சந்தோசமா இருக்கிறேன் அப்படீங் கற. நண்பன்கிற அடிப்படையில் சில கேள்விகள் கேட்கட்டுமா? கடுமையா இருக்கும். வருத்தமோ கோபமோ படக்கூடாது.

மன்சூர்: தாராளமா கேளு நிச்சயமா கோபப்பட மாட்டேன்.

ரஹீம்: நீயும் என்னிடம் தாராளமா கேள்வி கேள். சரி, குர் ஆன் மட்டும்

போதும் என்கிற உங்க இயக்கத்திற்கு தலைவர் யாரு? எந்த வெளிநாட்டில் இருந்து பணம் வருகிறது?

மன்சூர்: குர் ஆன் மட்டும் போதும் என்ற கொள்கை அநீதம் மிகைத்துப் போயிருக்கும் இந்த கால கட்டத்தில் நீதம் மேலோங்குவதற்காக இறைவன் அழுத்தமாக கொண்டு வந்திருக்கும் ஒரு ஏற்பாடு. இது ஒரு குர்ஆன் சகாப்தம்.

இது ஒரு இயக்கமும் இல்லை. இதற்கு தலைவர்னு யாரும் கிடையாது. அல்லாஹ்வின் மீது ஆணையாக எந்த வெளிநாட்டில் இருந்தும் பணம் வருவதுமில்லை .

ரஹீம் : பின்னர் எப்படி பத்திரிக்கை, நோட்டீஸ் இன்னும் செலவுகள் எல்லாவற்றையும், சமாளிக்கிறீர்கள்?

மன்சூர்: இதுதான் சத்தியம், நேர் வழின்னு உறுதியா தெரிஞ்சு போச்சு, மேலும் இறைவன் கொடுத்தவற்றிலிருந்து செலவு செய்யுங்கன்னு இறைக் கட்டளை இருக்குதே. இறைவன் கொடுத்த அறிவு, பணம், நேரம் காலம் பார்க்காத உடல் உழைப்பு, இவற்றை ஒவ்வொருத் தரும் தரும்போது காரியங்கள் எல்லாம் நன்றாக நடக்கிறது. இது மற்றவர்களுக்கு பெரிதாகத் தெரிகிறது. எல்லாம் அல்லாஹ்வின் உதவிதான்.

ரஹீம்: நீங்கள் முகம்மது நபியை மறுக்கின்றீர்களாம்,ஹதீஸ் கூடாது, அத்தனையும் இட்டுக்கட்டியது, பொய் என்கிறீர்களாம். இது இஸ்லாத்துக்கே விரோதமான கருத்து இல்லையா?

மன்சூர்: முகம்மது நபியை மறுப்பவன் எப்படி முஸ்லீமாக இருக்க முடியும்? இது எங்கள் மீது கூறப்படும் அவதூறு. எங்கள் பத்திரிக்கையில் கூறும் குர்ஆன் சம்பந்தமான கட்டுரைகளுக்கு எதிராக தகுந்த கருத்துக்களோ, பதில்களோ இல்லாததால் இவ்வாறு கதை கட்டுகிறார்கள்.

இறையச்சத்தோடு பொறுமையாக எங்கள் பத்திரிக்கைகளை குர்ஆனோடு ஒப்பிட்டுப்படித்துப்பார். ஹதீஸ்கள் பொய் என்றும், அவை நபிக்கும், குர்ஆனுக்கும் இஸ்லாத் துக்கும் விரோதமானது என்றும் உனக்கே நன்கு புரியும்.

ரஹீம்: உங்கள் மாத இதழ்களில் இப்பொழுது முஸ்லிம்களில் பெரும் பாலோர் செய்து வரும் அனைத்து வணக்கங்களையும் சுன்னத் என்ற நடை முறையையும் சிதைக் கப்பட்டவை என்றும் இணை வைப்பு கலந்தது என்றும் குற்றம் சுமத்தி எழுதி வருகிறீர்கள். இதன் மூலம் முஸ்லிம் மக்களின் வெறுப்புக்கு ஆளாவீர்கள் என்பதை அறிவீர்களா?

மன்சூர் : குர்ஆன் கூறும் இறைக்கட்டளைகளுக்கு வணங்கி நடப்பவர்களையே முஸ்லீம்கள்

என்று இறைவன் கூறுகிறார். மேலும் அவர்கள் சொற்களை செவியேற் பார்கள். அவற்றில் சிறந்தவற்றை ஏற்று நடப்பார்கள் என்றும் கூறுகிறார்.

எனவே முஸ்லீம்கள் என்போர் இறையச்சம் தன்னிடம் இருக்கிறதா என்று சுயபரிசோதனை செய்யட்டும். கண்மூடித்தனமாக பெரும்பான் மையோர் செய்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக இஸ்லாத்தில் எது ஒன்றையும் மார்க்கமாக பின்பற்றக் கூடாது என்று அல்லாஹ் தடுத்தி ருப்பதை உணரட்டும்.

எங்கள் இதழ்களில் உள்ள கட்டுரைகளை குர்ஆனோடு ஒப்பிட்டு சரிபார்த்து சிறந்ததாக உணர்ந்தால் செவியேற்று நடக்கட்டும். தவறுகள் இருந்தால் இறையச் சத்துடன் அதை சரிபார்த்து ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். சில மனிதர்களின் வெறுப்பையும் கோபத்தையும் காட்டிலும் படைத்த இறைவனின் வெறுப்புக்கும், கோபத்திற்கும் ஆளாகாமல் நம் செயல்கள் அமைய வேண்டும் என்பது முக்கிய மல்லவா? சிந்தித்துப் பார்.

அப்துல் ரஹீம் : உங்களது உயிர், உடமை, வியாபாரம், பந்தம் மற்றும் மக்கள் தொடர்பு பாதிக்கும் என்பது பற்றி நன்கு சிந்தித்தீர்களா?

மன்சூர்: ஆலீமான நீங்களே இப்படிக் கேட்கிறீர்களே! உலகில் நாம் படைக்கப்பட்டதன் நோக்கம் சைத்தானின் அழகாகக் காண்பிக்கப்படும் வழிகேட்டை விட்டு நீங்கி, குர்ஆன் காட்டும் நேர்வழியில் நடந்து, இறைச் சோதனையில் வெற்றியடைவது தான், நிரந்தர வாழ்க்கையான சுவனத்தை அடை வதுதான்.

அல்லாஹ் நாடினாலன்றி உயிருக்கு மட்டுமல்ல எந்த ஒரு சிறு தீமையோ ஏன், நன்மையோ கூட யாரும் எவருக்கும் செய்து விட முடியாது (4:120, 64:11) அநியாயக்கார சமூகத்திற்கு மாற்றாக வேறு ஒரு சமூகத்தை கொண்டு வருவோம் என்ற இறை வாக்கை நினைவில் கொள்ளுங்கள் (47:38)

சூழ்ச்சி செய்வோருக் கெல்லாம் மேலான இறைவன் அவர்களை தங்களது சூழ்ச்சி யிலேயே மாட்டிக் கொள்ளும்படி ஆக்கி வைப்பார் என்பதை அறியுங்கள்.

ரஹீம் : அத்தனை நபிமார்களும் தோன்றிய அரபு நாடுகளிலும், இன்னும் மக்கா, மதினாவிலும் கூட, லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்று கலீமா, பாங்கு இன்னும் பல்வேறு படங்கள், புத்தகங்கள், பிரின்டிங் குகளில், நபியை இணைத் துத்தான் உள்ளது. ஸலவாத்தும் ஓதப்படுகிறது. மேலும் நீங்கள் வரம்பு மீறல், இணை வைப்பு என்று கூறும் எல்லாமே அங்கும் உள்ளதே.

மன்சூர்: சில விஷயங்களை நாம் எல்லோரும் விளங்கிக் கொள்ள வேண்டும். மனதில் இருத்த வேண்டும். அவை:

1. அரபிகளோ அரபு நாடோ முஸ்லீம்களுக்கு வழிகாட்டிகள் இல்லை. அல்லாஹ்வின் வேதம் மட்டும் வழிகாட்டியாகும்.

2. நாம் தூதரை அனுப்பாத சமூகத்தவரே இல்லை என்று இறைவன் கூறுவதைக் கொண்டு, அரபு நாடு அல்லாமல் உலகில் அனைத்து நாடுகளிலும் ஒவ்வொரு சமூகத்திற்கும் தூதர் வந்திருப்பதை நம்ப வேண்டும்.

3. மக்கா, மதினாவிலும் இறை நம்பிக்கையாளர்களைப் போன்றே இணை வைப்பவர்களும், நிராகரிப்ப வர்களும், நயவஞ்சகர்களும் இருக் கத்தான் செய்வார்கள். மேலும் நபியை கலிமாவில் இணைப்பது குர்ஆனுக்கு முரண், இணை வைப்பு இவை அவர்கள் அறியாமலோ அல்லது அறிந்தோ செய்கின்ற செயல்கள்தான்.

முஹம்மது நபி காலத்திற்கு முன்னரும் இறை இல்லமான காஃபாவுக்கு உள்ளேயே பலநூறு சிலைகள் இருந்தன. என்று சரித்திரச் செய்திகள் , கூறு கின்றன. பல மக்களுக்குகிடைக்கப்பெற்றிருந்தும் முஹம்மது நபி காலத்தில் மொத்த அரபு நாடே காஃபிர்களாலும், இணை வைப்பாளர்களாலும் நிரம்பியிருந்ததென்பது நாம் அறிந்த ஒன்றுதானே.

இது போலெல்லாம் அரபியையோ, அரபு நாட்டையோ நம்பி அல்லது பெரும் பாலானவர்கள் செய்கிறார்களே என்று மார்க்கத்தை நாம் தவறாக பின்பற்றக்கூடாது என்றுதான், இறைவன் பின்பற்றத் தகுந்ததாக எக்காலத்துக்கும் பொருந்துவதாக பாதுகாக்கப்பட்ட அல்குர்ஆனை நமக்குத் தந்திருக் கிறார். மேலும் அரபிகளின் மோசமான குணம் பற்றி அல்லாஹ் குர் ஆனின் வசனங்கள் 9:97, 101, 48:11, 16, 49:14 ஆகியவற்றில் கூறுவதையும் சிந்தத்துப் பாரும்.

அப்துல் ரஹீம் : நீ சொல்வது எனக்குள் சிந்தனையைத் தூண்டி விடு கிறது. இறை அச்சமும், திடுக்கமும் ஏற்படுகிறது, அல்லாஹ் நம்மை காப்பாற்றுவானாக, நேர்வழி காட்டுவானாக.

உங்களைப் பற்றிக் கேள்விப் பட்டது பொய் என்றும் அவதூறு என்றும் நன்கு தெரிகிறது. இருப்பினும் நிறைய கேள்விகள் எனக்குள் இருக்கிறது. மறு முறை சந்திக்கும் பொழுது பேசலாம். அஸ்ஸலாமு அலைக்கும்.

மன்சூர் நேர்வழிகாட்ட அல்லாஹ் போதுமானவன், மீண்டும் சந்திப்போம். ஸலாமுன் அலைக்கும்.

# குர்ஆன் மட்டும் போதாதா?

## அல்முபீன் இதழின் அடுத்த கேள்வி

**திருடனோ, திருடியோ அவர்கள் சம்பாதித்த பாவத்திற்கு அல்லாஹ் விடமிருந்துள்ள தண்டனையாக அவர்களின் கரங்களைத் தரித்து விடுங்கள். (5:38)**

**கேள்வி : கைகளைத் துண்டிக்க வேண்டுமென்றால் எதுவரை துண்டிக்க வேண்டும்?**

**பதில்:** இக்கேள்விக்குரிய பதிலைக் காணும் முன் ஹதீதுகளைப் பின்பற்றுவோரிடம் நாம் இது சம்பந்தமான ஒரு கேள்விக்கு ஹதீஸ்களில் இருந்து பதில் தருமாறு கேட்டுக் கொள்கிறோம். அதாவது, வெட்டப் பட்ட கையை குற்றவாளி யிடம் தரலாமா? கூடாதா? இன்றைய மருத்துவ விஞ்ஞான முன்னேற்ற மடைந்த காலத்தில் வெட்டிய கையைக் கொடுத்தால் மீண்டும் ஒட்ட வைத்துக் கொள்ள முடியும். கூடும் என்றாலும் சரி, கூடாது என்றாலும் சரி, இக்கேள்விக்கு உங்களால் நேரடி யாக ஹதீஸ்களில் இருந்து பதில் கூற முடியுமா?

ஹதீஸ்களும், குர்ஆனைப் போலவே, எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் என்றால் இந்த, இன்னும் இது போன்ற எத்தனையோ நவீன பிரச்னைகளுக்கு ஏன் ஹதீஸ்களில் பதில் இல்லை என்பதை சிந்தனை யாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எல்லாக் காலத்திற்கும் பொருந்தக் கூடியது அல்லாஹ்வின் சொல்லான அல்குர்ஆன் மட்டுமே என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இது போன்ற அனைத்துக் கேள்விகட்கும் பதிலளிக்கவும், நம்பிக்கை யாளர்களுக்கு வழி காட்டவுமே இறைவன் நம்மிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் தூதரை இன்றைய நவீன காலத்திற்கான தூதராக தெளிவான ஆதாரங்க ளுடன் அனுப்பி வைத்திருக்கிறார்.

இப்போது, அவர்கள் கேள்விக்கு வருவோம். திருட்டுக்கு என்ன தண்டனை?

சமநீதி என்பதே சட்டம். (2:178-179)

குர்ஆனுடைய குற்றவியல் சட்டப்படி 10,000 ரூபாய் திருடி யதற்காக ஒருவன் தண்டிக்கப்பட ணேவ்டுமென்றால் அவன் யாரிடம் திருடினானோ அவரிடம் 10,000 ரூ. அளவுக்கு வேலை செய்ய வேண்டும். இது அல்லாமல் அத்திருட்டினால் வேறு ஏதேனும் இழப்புக்கள் ஏற்பட்டிருக்குமானால்


நஷ்டத்தையும் அவன் நிவர்த்தி செய்ய வேண்டும். இம்முறையின் மூலம் திருடனின் அப்பாவி மனைவியோ, குழந்தைகளோ தங்கள் குடும்பத் தலைவனை பிரிவதன் மூலம் இழப்புக்களை சந்திக்கும் நிலை அவர்களுக்கு ஏற்படாது. அது மட்டுமில்லாமல் செலவுமிக்க சிறைகளும் இதன் மூலம் குறையும். சிறைத் தண்டனை என்பது உபயோகமில்லாதது என்பதை இன்று உலகம் உணர்ந்து வருகிறது.

பொதுவான முஹம்மதியர்களின் நம்பிக்கைப்படி கைகள் வெட்டப்பட வேண்டும் என்பது தான் சட்டம். ஆனால் உண்மை அவ்வாறல்ல! ஆம்! இப்பொழுது நாம் அறிவிக்கப் பட்டிருக்கிறோம். திருடனின் கையில் அறுத்து அடையாளமிட வேண்டும் என்பதே இறைச் சட்டம். துண்டாக்கினாலும் சேர்த்து விடக் கூடிய இக்காலக் கட்டத்தில் திருடனின் கையில் அடையாள மிடுவது என்பதே திருடனுக்குரிய தண்டனையாகும். இதனை மெய்ப்பிக்கும் தூதர் ரஷாத் கலீஃபா தான் வெளியிட்ட குர்ஆன் மொழி பெயர்ப்பில் தெளிவாகக் குறிப்பிட் டிருக்கிறார்.

மேலும், இதற்காக அற்புதமான கணித அமைப்பிலான ஆதாரங் களையும் இறைவன் நமக்குத் தந்திருக்கிறார். திருடனின் கையில் அடையாளமிடுவது பற்றி 5:38 கூறுகிறது. இதன் அத்தியாய எண்ணையும், வசன எண்ணையும் நாம் கூட்டினால் 5+38=43. 'கையை அறுப்பது' பற்றிக் குர்ஆன் குறிப்பிடும் மற்றொரு வசனம் 12:31ல் இடம்பெறுகிறது. இவ்வசனத்தில் யூசுப் நபியின் அழகில் மயங்கிய பெண்கள் தங்கள் கைகளை அறுத்துக் கொள்வது பற்றிக் கூறப்படுகிறது. அவர்கள் தங்கள் கைகளைத் துண்டாக்கிக் கொள்ளவில்ல என்பதை நாம் அறிவோம். யாரும் அவ்வாறு சாவதானமாக செய்து கொள்ள முடியாது. இங்கே அறுத்துக் கொண்டார்கள் என்றே நாம் விளங்கிக் கொள்கிறோம். இரு இடங்களிலும் 'கதஅ' என்ற அ ரபி ப் பதமே பிரயோகப்படுத்தப்படுகிறது. மேலும் இவ்வசனம் 12:31.12+31 = 43! இதே எண்தான் 5:38ஐக் கூட்டிய போதும் நமக்குக் கிட்டியது. இதன்மூலம் கைகளில் அடையாள மிடுவதுதான் திருட்டுக்குரிய தண்டனை வெட்டுவதல்ல என்பதற்கான கணித ஆதாரங்கள் நமக்குக் கொடுக்கப் 'படுகிறது. மேலும் ஓர் கூடுதல் ஆதாரமும் நமக்குக் கொடுக்கப் படுகிறது. 12:31லிருந்து '19' வசனங்களை அடுத்து 12:50ல் மீண்டும் கையை அறுத்துக் கொள்வது பற்றிக் குறிப்பிடப் படுகிறது! எனவே திருடனின் கையைக் காட்டு மிராண்டித் தனமாக வெட்டி எறியக்கூடாது என்றும் அதை அறுத்து அடையாளமிடுவதே முறை என்றும் நாம் ஐயமற அறிந்து கொள்கிறோம்.

(தொடரும்)

(ஆ.ர்)



# வாள்முனையில் இஸ்லாம் பரவியதா?

மொழியாக்கம் :

**ஜீனத் மஹ்ஜபீன்**

**வா**ள் முனை வசனம்' எனத் தவறான விளக்கம் கொள்ள ஆதாரமாகக் கூறப்படும் வசனம் (9:5) ஆகும். குர் ஆனின் விரோதிகள் நீண்ட காலமாக 'இஸ்லாம் வாள் முனையில் பரவியது' என முத்திரை குத்தி வருகின்றனர். இவர்கள் தங்களுக்கு வசதியாக வெளிப் படையான ஆதாரமாக, வசனம் 9:5ஐத் துணைக் கொள்கின்றனர். இவ்வசனம் பற்றிய அதிகமான விவரங்களை அறியத் தருகிறோம்.

புனித மாதங்கள் சென்று விட்டால், இணை வைப்போரைக் கண்டவிட மெல்லாம் வெட்டுங்கள். அவர்களைச் சிறைப்பிடியுங்கள். அவர்களை முற்றுகையிடுங்கள். ஒவ்வொரு பதுங்குமிடத்திலும் அவர்களுக்காகப் பதுங்கியிருங்கள். அவர்கள் பச்சாத் தாபப்பட்டு விலகி, தொழுகையைக் கடைப்பிடித்து ஜகாத்தும் கொடுத்து வந்தால், அவர்களை அவர்கள் வழியில் விட்டு விடுங்கள். அல்லாஹ் மிக்க மன்னிப்பவரும், கிருபையுடை யவரு மாயிருக்கின்றார். (9:5)

முஸ்லிம் பண்டிதர்கள், இணை வைப்பவர்கள் எங்கிருந்த போதிலும் எக்காலத்திலும், (புனித மாதங்கள் தவிர) அவர்களுடன் சண்டை யிடவும் அவர்களைக் கொல்லவும் குர்ஆன் கட்டளையிடுவதாகத் தவறான பொருள் கூறிக் குர்ஆன் வசனங்களுக்குக் களங்கம் கற்பிக் கின்றனர். முடிவாக, அவர்கள் இந்த ஒரே ஒரு (9:5) வசனத்தைக் கொண்டு பற்பல குர்ஆனிய சட்டதிட்ட வசனங்களையும் செல்லத் தகாததாக்கி விடுகின்றனர். சர்வ வல்லமையுள்ள இறைவன் 6:115ல் கூறுகின்றார்.

"உமதிறைவனின் வார்த்தை உண்மையாலும் நீதத்தாலும் பூர்த்தி யாகிவிட்டது. அவருடைய வார்த்தைகளை மாற்றுபவர் எவருமில்லை...." (6:115)

அறியாமையிலுள்ள முஸ்லிம் பண்டிதர்கள் என்ன கூறுகின்றனர்? முஸ்லிம்களுக்கு சட்டபூர்வமான கடமையாக, இணை வைப்பவர்களை எந்த காலமாயி ருப்பினும் (புனித மாதங்கள் தவிர) தொழாவிட்டாலோ, ஜகாத்

கொடுக்காவிட்டாலோ அவர்களை க்கொன்று விடுமாறு கூறுவதாக இவ்வசனத்திற்குப் பொருள்கூறு கின்றனர். அருளப்பட்டசூராக் களின் வரிசைப்படி, 9வது சூரா இறுதியாக, (சூரா 110க்கு முன்) அருளப் பட்டதாகும். இவர்களின் கூற்றுப்படி, இந்த 9வது சூராவின் 5வது வசனம் பொருள் கொள்ளப்படுமாயின், அதற்கு முன் அருளப்பட்ட அனைத்து சூராக்களும் அவற்றின் சட்டதிட் டங்களும் பொருளற்றதாக ஆகிவிடுகின்றன.

அவர்களது கூற்றுப்படி, குர்ஆனின் வசனங்களின் குறிப்பிட்ட வார்த்தைகள் பொருளற்றதாக ஆக்கப்பட்டதுடன் அந்த வசனங்களையே பொருளற் றதாக ஆக்கி விடுகின்றனர். இந்த வசனங்கள் 50 சூராக்களில் வருகின்றன. அவற்றில் 100 வசனங்கள் பின்வருமாறு :

2:256 / 3:20/3:159/4:63 / 4:80/ 4:81/ 4:84 / 4:88 / 4:90 / 4:91 / 5:3/5:13 / 5:99 / 6:91 / 6:106 / 6:107 / 6:108/ 6:112 / 6:135 / 6:37 / 6:159 / 7:180 / 7:199 8:38 ? 8:61 10:41 / 10:99 / 10:102 / 10:108 / 11:121 / 11:122 / 13:40 / 15:3 / 15:85 / 15:88 / 15:94 / 21:56 / 23: 54 / 23:96 / 22:54 / 16:82 / 16:106 / 16:127 / 17:15 / 17:54 / 18:29 / 19:39 / 19:75 / 19:84 / 20:130 / 20:135 / 25:63 / 27:92 / 28:55 / 29:46 / 32:30 / 33:48 / 34:25/ 35:23 / 37:174 / 37:175 / 37:178 / 37:179 / 38:70 / 38:88 / 39:3 / 39:15 / 39:22 / 39:36/39:39/ 39:46 / 40:55 / 40:77 / 41:34/42:6/42:15/42:48/43:83/43:89/ 44:59 / 45:14 / 46:35 / 50:39 / 52:48 / 53:29 / 60:11 / 68:44 / 68:48 / 70:42 / 73:10 / 73:11 / 73:19 / 74:11 / 76:24 / 76:29/86:17/88:21/88:22/95:8/109:6

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு குர்ஆனிய வசனத்தின் மீதும் அச்சமுறும் விதமாகக் குற்றம் சாட்டப்படுகின்றது.

இவ்வசனங்களில் ஒவ்வொன்றும், "அவரது வார்த்தைகளை மாற்று பவர் எவருமில்லை " என்று கூறும் இறைவனின் புனித வார்த்தைக ளாகும். பல வசனங்களின் கருத்துக்கு மாற்றமாக ஒரே ஒரு வசனத்தை மட்டும் இறைவன் ஏன் கூற வேண்டும்? ஏன் தனது வார்த்தைகளை இறைவன் மாற்றிக் கூற முற்பட வேண்டும்? இவ்வாறான சிந்தனை சர்வ வல்லமையுள்ள இறைவன் மீதே களங்கம் கற்பிக்கும் சிந்தனையாகும். இந்த விஷயத்தில் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டுமானால், சூரா 9ன் முதல் 5 வசனங்களைக் கருத்தூன்றிப் படித்தல் அவசியமாகும்.

**சூரா 9, வசனம் 1**

இறைவனிடமிருந்தும், அவருடைய தூதரிடமிருந்தும் இணைவைத்து வணங்குபவர்களில் உங்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்களுக்கு நிபந்தனை யிலிருந்து விடுதலை அளிக்கப் பட்டது.

**வசனம் 2**

எனவே நீங்கள் நான்கு மாதங்கள் வரை பூமியில் சுற்றித் திரியலாம். நீங்கள்அல்லாஹ்வைத்தோற்கடிக்க

முடியாது என்பதையும் அல்லாஹ் நிராகரிப்போரை இழிவுபடுத்துவார் என்பதையும் நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.

**வசனம் 3**

அல்லாஹ்வும் அவருடைய தூதரும் இணைவைத்து வணங்கு பவர்களுடன் ஆன உடன்படிக் கையைக் கைவிட்டு விட்டனர் என்பதை இந்த மாபெரும் ஹஜ்ஜுடைய நாளில் அனைத்து மக்களுக்கும் அறிவிக்கின்றனர். ஆகவே நீங்கள் மீண்டு கொண்டால் அது உங்களுக்குத்தான் நன்று. ஆனால் நீங்கள் புறக்கணித்தால் நீங்கள் அல்லாஹ்விடமிருந்து தப்பிக்க முடியாது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

நிராகரிப்போருக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டு என்றும் உறுதியளிப்பீராக.

**வசனம் 4**

இணைவைத்து வணங்குபவர்கள் உங்களுடன் உடன்படிக்கையிலி ருந்தால், அதில் உங்களுக்குக் குறைவு செய்யாமலும், உங்களுக்கு விரோதமாக மற்றவருக்கு உதவி செய்யாமலும் இருக்கின்றனரோ அவர்களுக்கு அவர்களின் குறிப் பிட்ட காலம் வரையில் உடன்படிக் கையை நிறைவு செய்யுங்கள். அல்லாஹ் பயபக்தியுடையோரை நேசிக்கின்றார்.

**வசனம் 5**

புனித மாதங்கள் சென்று விட்டால் இணை வைப்போரைக் கண்ட இடமெல்லாம் வெட்டுங்கள். அவர்களைச் சிறைப்பிடியுங்கள். அவர்களை முற்றுகையிடுங்கள். ஒவ்வொரு பதுங்குமிடத்திலும் அவர்களுக்காகப் பதுங்கியிருங்கள். அவர்கள் பச்சாத்தாபப்பட்டு விலகி, தொழுகையைக் கடைப்பிடித்து, ஜகாத்தும் கொடுத்து வந்தால் அவர்களை அவர்கள் வழியில் விட்டு விடுங்கள். அல்லாஹ் மிக்க மன்னிப்பவரும் கிருபையுடையவ ருமாயிருக்கின்றார்.

இந்த ஐந்து வசனங்களையும் கவனமாகப் படித்தபின் கீழ்க்கணும் விவரங்கள் நமக்குத் தெரியவருகின்றன.

1. வசனம் 9:5 போர்க்காலத்தில், அதாவது இணைவைத்து வணங்குபவர்களில் விசுவாசி களுடன் போர் செய்பவர்கள் பற்றிக் கூறுகிறது. இணை வைப்பவர்கள் அனைவ ரையும் ஒட்டுமொத்தமாகக் குறிப்பிடவில்லை . வசனம் 1ல் "இணைவைத்து வணங்கு பவர்களில் உங்களுடன் உடன் படிக்கை செய்து கொண் டவர்கள்....." என்ற வார்த்தைகள். கவனிக்கப் படவேண்டியவை.

2. வசனம் 2ல், இறைவன் இணைவைப் பாளர்களை நன்கறிந்து இருக்கின்றார். புனித நான்கு மாத காலம் வரை அவர்கள் சுதந்திரமாக இருக்கவிட்டு வைத்திருக்கின்றார். (விசுவாசிகள் புனித மாதங்களில் போர் செய்வதிலிருந்து தடுக்கப்பட் டுள்ளனர்) இருப்பினும், முடிவில் அவர்கள் இறைவனிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

3. வசனம் 4ல், இணை வைப்பவர்களில் உடன்படிக்கை

செய்து கொண்டவர்கள் மற்றும் அதிலிருந்து மீறாமல் இருப்பவர்களை விசுவாசிகள் தாக்கக் கூடாது என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

4. இதனைத் தொடர்ந்து வசனம் 5ல், புனித மாதங்கள் கடந்த பின்னர், உடன்படிக்கையிலிருந்து விலகி இணைவைப் பாளர்களுடன் தொடர்ந்து போரிடும்படியும் அவர்களைக் கொல்லவும் கட்டளையிடுகின்றார்.

5. வசனம் 5ன் உண்மையான அர்த்தம் வசனம் 4ல் உறுதிப்படுத்தப்படுகிறது. (உடன்படிக்கையிலிருந்து விலகாமலிருக்கும் இணைவைப் பவர்களுடன் விசுவாசிகள் போர் செய்யக்கூடாது). விசுவாசிகள் இணைவைப் பவர்களுடன் போரிடும்படிக் கட்டளையிடப் படுகின்றனர். (புனித மாதங்கள் தவிர) **போர்க்காலத்தில் மட்டுமே** உடன்படிக்கையை மீறும் இணை வைப்பவர்களுடன் போரிடும்படிக் கட்டளையிடப்படுகின்றனர். **போர்க்காலத்தில் மட்டுமே** இது சாத்தியமாகும்)

வசனம் 7ல், இதே வார்த்தைகளில் இதன் (9:5) பொருள் மீண்டும வலியுறுத்தப்படுகிறது:

அல்லாஹ் விடத்திலும் அவருடைய தூதரிடத்திலும் இணைவைத்து வணங்குவோரின் உடன் படிக்கைக்கு எவ்வாறு மதிப்பிருக்க முடியும்? ஆயினும் புனித மஸ்ஜிதின் முன் உங்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்கள் உங்களுடன் உறுதியாக இருக்கும் வரையில் நீங்களும் அவர்களுடன் உறுதியாகவே இருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியுடையோரை நேசிக் கின்றார். (9:7)

சூரா 9ன் முதல் 7 வசனங்களில் இணைவைப் பவர்களுடன் போர் செய்யும் போது விசுவாசிகள் கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்கள் பற்றி தெளிவான விவரங்கள் கூறப்படுகிறது. இருந்தாலும் குர்ஆன் வசனங்களுக்குக் களங்கம் கற்பிப்பவர்கள் இவ்வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 'உடன் படிக்கை' என்ற வார்த்தையை, அவற்றின் உண்மையான பொருள் விளங்கத் தரும் வார்த்தையை அவர்கள் அறியாதவர்கள் போலிருக் கின்றனர். எனவே அவர்கள் எந்த ஒரு முஸ்லிமும் எந்தக் காலத்திலும் (புனித மாதங்கள் தவிர) இணை வைப்பாளர்களைக் கொல்லலாம் என்று சட்டமாக்கிக் கொண்டனர். குர்ஆனின் எதிரிகள் 'வாள் முனையில் இஸ்லாம்' பரவியது என்று கூறுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை அல்லவா?!!

6. மேலதிகமாக, சமாதானத்தைக் கோருபவர்களுடன் போர் செய்யக் கூடாது என்று இறைவன் தடை விதித்திருக்கின்றார். அந்த வசனத்தைக் காண்போம்.

'.... உங்களுடன் யுத்தம் புரியாது விலகி இருந்து உங்களிடம் சமாதானத்தைக் கோரினால் அங்கீகரித்துக் கொள்ளுங்கள். இத்தகையோர் மீது அல்லாஹ் உங்களுக்கு யாதொரு வழியும் வைக்கவில்லை (4:90)

இந்த வசனத்துடன் மேலும் பல வசனங்களும் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு விட்டன என்பதை விளக்கங்களுடன் சரிகாண்போம். குர் ஆன் வசனங்களில் பெருந்தன்மையான பொருள் தரும் பல வசனங்களை படிக்க விடாமல் சிதைத்து விட்டு அவற்றிற்குக் களங்கத்தைக் கற்பிக்கும் செயல் ஒரு மாபெரும் குற்றமாகும். இதைப் பற்றி ஒருசில வசனங்களில் இங்கு ஆராய்வோம். இதற்கான உதாரணங்களை 5 வகைப்படுத்திக் கொள்வோம்.

1. வேத வெளிப்பாடுகள் மார்க்கத்தில் கட்டாயமில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன. தூதர் (அனைத்து விசுவாசிகளும்) குர்ஆனை அறிவிப்பவராகவும் எச்சரிக்கை செய்பவராகவும் இருக்கிறாரே தவிர இறைவனுக்கு அர்ப்பணித்துக் கொள்ளும்படி மனிதர்களை ஒருபோதும் நிர்ப்பந்திக்கவில்லை .

2. வேத வெளிப்பாடுகள் சமாதானத்தை விரும்புபவர்களுடன் போரிடுவதைத் தடை செய்கின்றன.

3. வேத வெளிப்பாடுகள் இஸ்லாத்தின் பக்கம் வரும்படி பகிரங்க அறிவிப்பு செய்வதுடன், தகுந்த காரணங்களுடன் குர்ஆனைக் கொண்டு நற்போதனை செய்யும்படி கூறுகிறதே தவிர ஏற்காதவர்களின் தலைகளைத் துண்டாடச் சொல்ல வில்லை .

4. வேத வெளிப்பாடுகள் நிராகரிப்போரையும் நயவஞ்சகர்களையும் மன்னித்துப் புறக்கணிக்குமாறு கூறுகின்றன.

5. வேத வெளிப்பாடுகள் இணைவைப் பவர்களுக்கும் இறை நிராகரிப் பாளர்களுக்கும் இறைவனே தண்டிக்கக் கூடியவர் என்றும் மனிதர்களில்லை என்றும் கூறுகின்றன.

**முதலாவது:**

மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை. தூதர் (அனைத்து விசுவாசிகளும்) குர்ஆனைக் கொண்டு அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவரே தவிர இறைவனுக்கு அர்ப்பணித்துக் கொள்ளும்படி நிர்பந்திப்பவரல்லர்.

1. பின்னும் அவர்கள் உம்முடன் தர்க்கித்தால் "நிச்சயமாக நான் அல்லாஹ் வுக்கு முற்றிலும் வழிப்பட்டு விட்டேன். நானும் என்னை பின்பற்றியவர்களும், " என்று கூறி வேதமளிக்கப்பட்டவர்களையும் பாமரர்களையும் நோக்கி, "நீங்களும் அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிபடுகிறீர்களா?" என்று கேளும். அவர்களும் வழிபட்டால் நிச்சயமாக அவர்கள் நேரான வழியை அடைந்து விட்டார்கள். அன்றி அவர்கள் புறக்கணித்து விட்டால் எடுத்துரைப் பதுதான் உம்மீது கடமையாக இருக்கின்றது. அல்லாஹ் தன் அடியார்களை உற்று நோக்கினவராக இருக்கிறார். (3:20) இந்த வசனத்திலிருந்து, தூதருடைய கடமை இறை செய்தியைப் பெற்றுத் தருவதும் மக்களை இறைவனுக்கு அர்ப்பணித்துக் கொள்ள அழைப்பு விடுப்பதும் மட்டுமேயாகும் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்கிறோம். அவர்கள்

அழைப்பை ஏற்றுக் கொண்டால் நேர்வழியை அடைந்து விட்டனர். அவர்கள் மறுத்தால் அவர்களைத் தனியாக விட்டு விடுமாறு தூதர் அறிவுறுத்தப்படுகிறார்.

2. இதே செய்தி மேலும் பல வசனங்களில் உறுதிப்படுத்தப் படுகிறது. தூதருடைய கடமை எடுத்துரைப் பதே தவிர அல்ல. நீங்கள் வெளியிடுவதையும் நீங்கள் மறைத் துக் கொண்டிருப்பதையும் அல்லாஹ் நன்கறிவார். (5:99)

3. மார்க்கத்தில் நிர்ப்பந்தமே யில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி தெளிவாகி விட்டது. எவன் ஷைத்தானை நிராகரித்துவிட்டு அல்லாஹ்வை விசுவாசிக்கிறானோ அவன் அறுபடாத பலமானதொரு கயிற்றைப் பிடித்துக் கொண்டான். அல்லாஹ் செவியுறுபவரும் அறிபவருமாக இருக்கின்றார். (2:256) இணை வைப்பாளர்களைக் கத்தி முனையில் இஸ்லாத்தை ஏற்கச் செய்தனர் என்ற செய்தியை இந்த வசனம் பொய்யாக்குகின்றது. இவ்வாறு குற்றம் சுமத்துவதும், அந்த செய்தியை நம்பிக்கை கொள்வதும் குர்ஆனிய உண்மைக்கு முற்றிலும் மாற்றமானதேயாகும்.

4. உம் இறைவனால் உமக்கு வஹீ மூலம் அறிவிக்கப் பெற்றவற்றையே நீர் பின்பற்றும். அவரைத் தவிர வேறொரு நாயன் இல்லை. ஆகவே இணை வைப்போரை நீர் புறக்கணித்து விடுவீராக. அல்லாஹ் நாடியிருந்தால் அவர்கள் இணை வைத்திருக்கவே மாட்டார்கள். அவர்கள் மீது காப்பாளராக நாம் உம்மை ஏற்படுத்தவில்லை. நீர் அவர்களைக் கண்காணிக்க வேண் டிய பொறுப்புடையவருமல்ல. (6:106,107).

இணை வைப்பவர்களைப் புறக்கணித்து விடுமாறு மீண்டும் நபிக்கு இறைவன் கட்டளையிடு கின்றார். நபிக்குக் கொடுக்கப்பட்ட ஒரே கடமை செய்தியை எடுத்துரைப்பதும் எச்சரிக்கை செய்வதுமே என்று இறைவன் சுட்டிக்காட்டுகிறார். நபியை அவர் களுக்கு காப்பாளராகவோ, வக்கீலா கவோ இறைவன் நியமிக்கவில்லை.

5. இறைவனுடைய அழகிய பெயர்களில் தவறு செய்பவர் களையும், அவரது குணாதிச யங்களைக் கெடுப்பவர்களையும் விட்டுவிடுமாறு கூறுகின்றார்:

அல்லாஹ்வுக்கே மிக அழகிய திரு நாமங்கள் உரியன. அவற்றைக் கொண்டே நீங்கள் அவரை அழை யுங்கள். அவருடைய பெயர்களில் தவறிழைப் போரை புறக்கணித் துவிடுங்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்குரிய கூலியைச் சீக்கிரத்தில் அடைவார்கள். (7:180) இங்கு மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டிய செய்தியாவது, இறைவன் தவறு செய்வோரைத் தாமே தண்டிப்பதாகக் கூறுகின்றார் என்பதும், மனிதர்கள் அவர்களைத் தண்டிக்க வேண்டியதில்லை என்பதுமாகும்.

6. நீர் கூறும்: "மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்தே இந்தச் சத்தியம் உங்களிடம் வந்திருக்கிறது.

எவன் நேரான வழியில் செல்லுகின்றானோ அவன் தன்னுடைய நன்மைக்காகவே செல்லுகின்றான். எவன் வழிதப்பி விடுகிறானோ அவன் நிச்சயமாகத் தனக்குத் தானே கேடான வழியில் செல்கின்றான். நான் உங்களை நிர்வகிக்கத் தக்க அதிகாரம் பெற்றவன் அல்லன்" (10:108)

7. உமக்கு ஏவப்பட்டதை நீர் அவர்களுக்கு விவரித்தறிவித்து விட்டு இணைவைக்கும் இவர்களை நீர் புறக்கணித்து விடும். (15:94) இவ்விரு கட்டளைகளும், மிகத் தெளிவாக இணைவைப்பவர்களைப் புறக்கணித்து விடுமாறு கூறுகின் றனவே தவிர, அவர்களது தலைகளைத் துண்டாடச் சொல்லி கட்டளையிடவில்லை.

8. நீர் கூறும்: அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் நீங்கள் வழிப்பட்டு நடவுங்கள். நீங்கள் புறக்கணித்தாலோ அவர் மீதுள்ள கடமையெல்லாம் அவர்மீது சுமத்தப்பட்டதுதான். உங்கள் மீதுள்ள கடமையெல்லாம் உங்கள் மீது சுமத்தப்பட்டதுதான். நீங்கள் அவருக்கு வழிப்பட்டு நடந்தால் நீங்கள்தாம் நேரான வழியில் சென்று விடுவீர்கள். தெளிவாக அறிவிப்பதைத் தவிர ( தூதர் மீது கடமையில்லை. (24:54)

9. நீர் கூறும்: "முற்றிலும் கலப்பற்ற மனத்துடன் அல்லாஹ்வையே நான் வணங்குகிறேன். என்னுடைய வழிபாடு அவருக்கேயுரியது ஆனால் நீங்கள் அவரையன்றி விரும்பியவர்களை வணங்கிக் கொண்டிருங்கள்" கூறும்: மெய்யாகவே நஷ்டமடைந்தவர்கள் யாரென்றால் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் மறுமை நாளில் நஷ்டத்தை உண்டு பண்ணிக் கொண்டவர்கள்தாம். இதுவே மெய்யான நஷ்டம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (39:12-15)

இணை வைப்பவர்கள் அவர்கள் விரும்பியவற்றை வணங்க விட்டு விடுமாறும், மறுமை நாளில் இறைவன் மட்டுமே அவர்களைத் தண்டிக்கக் கூடியவர் என்றும், விசுவாசிகள் அவர்களைத் தண்டிக்க வேண்டியதில்லை என்றும் மீண்டும் தெளிவாகக் கடட்ளையிடப் பட்டிருக்கின்றது. இந்த குர்ஆனிய வார்த்தைகள் மிகக் கடுமையாக, அவர்கள் தலைகளை எடுப்பது உங்கள் வேலையில்லை என்று சுட்டிக் காட்டுகின்றன.

10. உங்கள் மார்க்கம் உங்களுக்கு, என் மார்க்கம் எனக்கு" (109:6) இந்த வசனம் தூதர், (அனைத்து விசுவாசிகளும்) இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களிடம் நேரிடையாகக் கூறுவதாக அமைந்திருக்கிறது. இதையே, 'நீங்கள் விரும்பும் மார்க்கத்தைப் பின்பற்றிக் கொள்ளுங்கள். நான் என்னுடைய மார்க்கத்தைப் பின் பற்றுகிறேன்" என்று கூறுவதாகவும் கூறலாம். மீண்டும் ஒருமுறை மார்க்கத்தில் எந்தவிதமான நிர்ப்பந்தமுமில்லை என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

11. உமதிறைவன் நாடினால் புவியிலுள்ள மக்கள் அனைவரும் விசுவாசம் கொண்டிருப்பார்கள்.

மனிதர்கள் விசுவாசிகளாகிவிட வேண்டு மென்று அவர்களை நீர் நிர்ப்ப ந்திக்க முடியுமா? (10:99)

இந்தக் கேள்வியில், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி யாரையும் நிர்ப்பந்திக்கக் கூடாது என்ற கட்டளை மறைந்திருப்பதையும் அறிந்து கொள்ளலாம். இந்தப் புவி வாழ்வில் இணைவைக்கும் செயலுக்கு அஞ்சிக் கொள்வது நமது சொந்த. முடிவாக இருக்கிறது. இவ்விஷயத்தில் யாரும் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. நாம் முஸ்லிம்களாகி விடும்படிக் கட்டா யப்படுத்தினால், அதற்கு இறைவ னின் அனுமதியில்லை. முஸ்லிம் களாகி விடுவது நமது சொந்தத் தேர்வாக இருக்கிறது.

12. 'நீர் கூறும்: "இந்த உண்மை உமதிறைவனிடமிருந்து வந்தது", விரும்பியவர் விசுவாசிக்கலாம். விரும்புபவர் நிராகரிக்கலாம்" இந்த வசனமும் "மார்க்த்தில் நிர்ப்பந்தமே இல்லை " (18:29) என்பதை வெகு தெளிவான வார்த்தைகளில் விளக்குகின்றது.

13. ஆகவே நீர் நல்லுபதேசம் செய்வீராக. நீர் அவர்களை நிர்ப்பந்திக்கக் கூடியவரன்று (88:21-22)

மார்க்கத்தில் நிர்ப்பந்தமேயில்லை என்பது மீண்டும் தெளிவாகின்றது.

**இரண்டாவது :**

**வேத வெளிப்பாடுகள் சமாதா னத்தை விரும்புபவர்களுடன் போர் செய்யத் தடை விதிக்கின்றன.**

1. அவர்கள் சமாதானத்தை விரும்பினால் நீங்களும் சமாதா னத்தை விரும்புங்கள். அல்லாஹ் வின் மீது பொறுப்பேற்படுத்திக் கொள்ளுங்கள். அவர் செவியுறுப வரும் நன்கறிந்தவருமாயிருக் கின்றார் (8:61) சமாதானத்தை விரும்புபவர்களுடன் போர் செய்யத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை இவ்வசனம் விளக்குகிறது.

2. உங்களுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டவர் களையும், உங்களுடன் போர் புரிவதையோ, அல்லது தங்களு டைய கூட்டத்தினருடன் போர் புரிவதையோ விரும்பாமல் உங்க ளிடம் வந்தவர்களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள். இறைவன் நாடினால் அவர்களை உங்கள் மீது சாட்டியிருப்பார். ஆகவே, உங்களிடம் யுத்தம் புரியாது விலகி இருந்து சமாதானத்தைக் கோரினால் அங்கீ கரித்துக் கொள்ளுங்கள். இத்தகை யோர் மீது அல்லாஹ் உங்களுக்கு யாதொரு வழியும் வைக்கவில்லை. (4:90) சமாதானத்தை விரும்புபவர் களுடன் விசுவாசிகள் போர் செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக் கவில்லை. மேலும், இந்தக கட்ட ளையை மீறுபவர்களுக்கு அவர்களது குற்றத்திற்கு மன்னிப்பு கிடையாது என்பதையும் இந்த வசனம் வலியறுத்துகின்றது.

3. அல்லாஹ்விடத்திலும் அவருடைய தூதரிடத்திலும் இணைவைத்து வணங்குவோரின் உடன்படிக்கைக்கு எவ்வாறு மதிப்பிருக்க முடியும்? ஆயினும் புனித மஸ்ஜிதின் முன் உங்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டவர்கள் அதைப் பேணும்

வரையில் நீங்களும் அதைப் பேணுங்கள். அலலாஹ் பயபக் தியுடையோரை நேசிக்கின்றார் (9:7) மீண்டும், 'விசுவாசிகள் சமாதா னத்தின் மீது நிலைத்திருப்ப வர்களுடன் போர் செய்யக்கூடாது என்று தடை செய்யப்படுகின்றனர்' என்பது உறுதியாகின்றது.

**மூன்றாவது:**

வேத வெளிப்பாடுகள் இஸ்லாத் தின் பக்கம் வரும்படி பகிரங்க அறிவிப்புச் செய்வதுடன், தகுந்த காரணங்களுடன் குர்ஆனைக் கொண்டு நற்போதனை செய்யும்படி கூறுகிறதே தவிர ஏற்காதவர்களின் தலைகளைத் துண்டாடச் சொல்ல வில்லை .

1. அவர்களின் இருதயங்களில் இருப்பவைகளை அல்லாஹ் நன்கறிந்தேயிருக்கின்றார். நீர் அவர்களை புறக்கணித்து விடுவீராக, அவர்களுக்கு நல்லுபதேசம் செய்வதும், தெளிவாக எடுத்துக்கூறுவதும் அவர்களது ஆன்மாக்களுக்குப் பயனளிக்கும். (4:63) வருத்தத் திற்குரிய விஷயமாக, இவ்வசனம் (4:63) 'வாள்முனை வசனம்' (9:5) ஆல் பொருளற்றதாக இவர்களால் ஆக்கப்பட்டு விட்டது. வேறொரு விதமாகக் கூறவேண்டுமென்றால், அவர்கள், விசுவாசம் கொள்ள வில்லை எனில் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூறுவதோ, நல்லுபதேசம் செய்வதோ அல்லாமல் அவர்களைக் கொன்றுவிட வேண்டும் என்று கூறுகின்றனர்.

2. நீர் நளினமாகவும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டும் உம் இறைவனின் வழியில்லாமல் அழைப்பீராக, அன்றி, அவர்களுடன் நீர் அழகான முறையில் தர்க்கம் செய்வீராக. அவருடைய வழியிலிருந்து தவறியவர்கள் எவர் என்பதை உமதிறைவன் நன்கறிவார். நேரான வழியிலிருப்போர் எவர் என்ப தையும் அவர்தான் நன்கறிவார். (16:125) இந்தக் குர்ஆன் வசனம் கூறும் நல்லுபதேசமும், இணை வைப்பவர்களின் தலைகளைத் துண்டாடும்படிக் கூறும் கெட்ட வழிகாட்டுதலும் இரு வேறு துருவங்களாக இருப்பதை அறிந்து கொள்ளலாம்.

3. ரஹ்மானுடைய அடியார்கள் பூமியில் பணிவாகவும் நடப்பார்கள். மூடர்கள் அவர்களுடன் தர்க்கம் செய்ய முற்பட்டால், 'ஸலாம்' (அமைதி) கூறிவிலகி விடுவார்கள். (25:63) அனைத்து மக்களிடமும் பணிவைக் கைக் கொள்ளும்படியும், மூடர்களிடம் அமைதியைக் கடைப் பிடிக்கும்படியும் குர்ஆன் நமக்கு வழிகாட்டுகிறது.

4. அடைக்கலம் அளிக்கக் கூடியதாக இந்நகரத்தை ஆக்கிய இறைவனையே வணங்குமாறு நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். சகல பொருட்களும் அவருக்குரியனவே. அவருக்கே முற்றிலும் வழிப்பட்ட வனாக இருக்கும்படி நான் கட்டளையிடப்பட்டுளளேன்.

மேலும குர்ஆனை ஓதிக் காண்பிக்குமாறும், எவன் நேரான வழியில் செல்கின்றாசனோ அவன் தன் சுய நன்மைக்காகவே செல்கின்றான். எவரேனும் வழி தவறினால், நீர் கூறும் : நான் அச்சமூட்டி எச்சரிக்கை

செய்பவன் மட்டுமே" (27:91-92) இங்கு குர்ஆனைக் கொண்டு நல்லுபதேசம் செய்யும்படியும், தவறான வழியில் செல்வோரை விட்டுவிடுமாறும் கூறப்படுகிறது.

5. நன்மையும் தீமையும் சமமாகிவிடாது. நீர் நன்மையைக் கொண்டே தீமையைத் தடுத்துக் கொள்ளும். அவ்வாறு செய்தால், உமக்கும் அவருக்கும் இடையே உள்ள பகைமை மாறி உம்முடைய விரோதி உம்முடைய உண்மையான நண்பராகிவிடுவார். (41:34) இறைவனுடைய வழியில் செல்லக்கூடிய உண்மையான விசுவாசிகள், எதிரியிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை இவ்வசனம் சுட்டிக் காட்டுகின்றது. தீமை செய்பவர்களுக்கும் நன்மை செய்யும்படி நமக்கு உபதேசிக் கின்றது.

**நான்காவது:**

வேத வெளிப்பாடுகள் நிராகரிப் போரையும் நயவஞ்சகர்களையும் மன்னித்துப் புறக்கணிக்குமாறு கூறுகின்றது.

1. அவர்கள் தங்களுடைய உறுதிமொழிக்கு மாறு செய்ததன் காரணமாக நாம் அவர்களைச் சபித்து அவர்களுடைய இருதயங்களை இறுகச் செய்து விட்டோம். அவர்கள் வசனங்களை அவற்றின் அர்த்தங்களி லிருந்து புரட்டுகின்றார்கள். அன்றி அதில் நினைவூட்டப்பெற்றிருந்த பாகத்தையும் மறந்து விட்டார்கள். ஆகவே அவர்களில் சிலரைத் தவிர அவர்களின் மோசடியை நீர் தவறாமல் கேள்விப்படுவீர். ஆகவே இவர்களை நீர் மன்னித்துப் புறக்கணித்து விடுவீராக. அல்லாஹ் நற்செயல் புரிவோரை நேசிக் கின்றார். (5:13) இவ்வசனத்தில் யூதர்கள் இறை கட்டளைகளுக்குத் தவறான அர்த்தங்களைக் கூறி வேதத்தின் உண்மைப் பொருளை மாற்றி விட்ட பாவத்தின் காரணமாக,இறைவன் அவர்களைச் சபிக்கின்றார். (வசனம் 12ஐக் காண்க) இருந்தபோதிலும் நபியிடம் (அனைத்து விசுவாசிகளிடமும்) அவர்களை மன்னித்து விடுமாறு இறைவன் கட்டளையிடுகின்றார். இது நிராகரிப்பாளர்களின் தலை களைத் துண்டாடும்படி அவர்கள் கூறுவதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட வசனமாகும்.

2. நீர் மன்னிப்பைக் கைக் கொண்டு நன்மையை ஏவி வருவீராக! அன்றி, அறிவீனர் களைப் புறக்கணித்து விடும். (7:199) அறிவீனர்களான இணை வைப்பா ளர்களை மன்னித்து விடுமாறும், இறைவனுக்கு அர்ப்பணிக்குமாறு நிர்ப்பந்திக்க வேண்டாம் என்றும் கட்டளையிடப்படுகின்றது.

3. வானங்களையும் பூமியையும் இவற்றிற்கு மத்தியிலுள்வற்றையும் தக்க காரணமின்றி நாம் சிருஷ் டிக்கவில்லை . உலக முடிவுநாள் வரும். எனவே, கண்ணியமான முறையில் புறக்கணித்து வாரும். (15:85) இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்திற்கு தவறான அர்த்தம் கற்பிக்க முயல்வார்கள் என்பதை

உணர்த்தும் இவ்வசனம் குர்ஆனின் இருதயமாகும். குர்ஆனைத் தவறாக உருவகப்படுத்து பவர்களையும் மன்னித்து விடுமாறு இறைவன் கட்டளையிடுகின்றார்.

4. நீர் அவர்களைப் புறக்கணித்து "ஸலாமுன்" என்று கூறி வாரும். பின்னர் அவர்கள் அறிந்து கொள்வார்கள். (43:89) நிராகரிப் பாளரிடம் 'அமைதி' (ஸலாம்)யைக் கடைப்பிடிக்கும்படி இந்த 'அமைதி' யாக இருக்கும்படி கூறும் வசனம் அறிவீனர்களால் குர்ஆனுக்கு எதிராகக் கையாளப்படுகிறது.

5. விசுவாசிகளுக்கு நீர் கூறும்: அல்லாஹ்வுடைய தண்டனைகளை நம்பாதோரை அவர்கள் மன்னித்து விடட்டும். அவர்கள் தேடிக் கொண்ட வினைகளுக்குத் தக்க பலனை அவர் கொடுப்பார். (45:14) இறைவனின் பகைவர்களை மன்னித்து விடும்படி அல்லாஹ் கூறுகின்றார். அவர்க. ளுக்குரிய தண்டனையை இறைவன் தானே தருவதாகக் கூறுகின்றார். அறிவீனர்கள் குர்ஆனின் அர்த்தத் தையே புரட்டி விடுகின்றனர்.

**ஐந்தாவது:**

வேத வெளிப்பாடுகள் இறை நிராகரிப்பாளருக்கும் இணை வைப்பாளர்களுக்கும் இறைவனே தண்டிக்கக் கூடியவர் என்றும், மனிதர்களில்லை என்றும் கூறுகின்றன.

1. அவர்களுக்கு நாம் வாக்களித்த சிலவற்றை உம்முடைய கண்ணால் நீர் காணும்படி செய்தாலும் அல்லது நாம் உம்மைக் கைப்பற்றிக் கொண்டாலும், உம்முடைய கடமை யெல்லாம் தூதைச் சேர்ப்பிப் பதுதான், கணக்கை வாங்குவது நம் கடமையாகும். இணை வைப்பாளர் களுக்கும் நிராகரிப்பாளர்களுக்கும் நீதி வழங்குவதும் தண்டனை தருவதும் இறைவன் தன்மீது கடமையாகிக் கொண்டதையும் மனிதர்களுக்குக் கடமையாக்க வில்லை என்பதையும் இவ்வசனம் அறிவிக்கிறது.

2. அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டே அவரை அழையுங்கள். அவருடைய பெயர்களில் தவறிழைப் போரை விட்டுவிடுங்கள். அவர்கள் தம் வினைகளுக்கத் தக்க கூலியைச் சீக்கிரத்தில் அடைவார்கள். (7:180) இறைவனின் குணப்பெயர்களில் அவருடைய கண்ணியத்தைக் குறைக்கும் விதமாகப் பொய் கூறுபவர்களை விட்டு விடுமாறு மீண்டும் அறிவுறுத்தப்படுகின்றது. அவர்களைத் தண்டிக்கும் கடமை இறைவனுக்கேயன்றி மனிதர்க ளுக்கில்லை.

3. ஆதலால் நீர் அவசரப்படாதீர் அவர்களுக்காக நாம் கணக்கிட்டுக் கொண்டே இருக்கிறோம். (19:84) நபியோ, அல்லது யாதொரு விசுவாசியோ இணைவைப்பவர்

களைத் தண்டிக்க அவசரப்பட வேண்டியதில்லை என்றும், இறைவன் அவர்களுக்கான தண்டனையை மறுமையில் தயார் செய்து வைத்திருக்கிறார் என்பதையும் இவ்வசனம் உறுதிப்படுத்துகின்றது. இதே செய்தி கீழ்க்காணும் வ ச ன த் தி லு ம் உறுதிப்படுத் தப்படுகின்றது.

அவர்கள் கூறுவதைப் பற்றி நீர் பொறுமையுடன் சகித்திரும். சூரிய உதயத்திற்கு முன்னரும் சூரிய அஸ்தமனத்திற்கு முன்னரும் இரவு காலங்களிலும் உம் இறைவனைத் புகழ்ந்து துதி செய்து கொண்டிருப் பீராக. பகலின் இரு முனைகளிலும் நீர் திருப்தியடையலாம் (20:130)

4. நிச்சயமாக, இறைவனைத் தனித்து வணங்குவதே மார்க்க மாகும். அல்லாஹ்வுடன் மற்றவற் றையும் பாதுகாவலாக எடுத்துக் கொள்பவர்கள், "நாங்கள் அவர்களை இறைவனுக்கு மிக்கசமீபமாக்கி வைப்பதற்காகவே வணங்குகிறோம் " என்கின்றனர். அவர்கள் வேறுபட்டுக் கொண்டிருக்கும் இவ்விஷயத்தில் அல்லாஹ் மறுமையில் தீர்ப் பளிப்பார். மறுத்துப் பொய் கூறுபவர்களை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துவதில்லை . (39:3)

இணைவைப் பவர்களுக்கு இறைவனே நீதி வழங்குவார் என்பது மீண்டும் உறுதிப்படுகிறது.

5. நீர் கூறும்: இந்த உண்மை உமதிறைவனிடமிருந்து வந்தது. விரும்பியவர் இதனை விசுவாசிக் கலாம். விரும்புபவர் நிராகரித்து விடலாம். அக்கிரமக்காரர்களுக்கு நாம் நரகத்தைத்தான் சித்தப்படுத் தியுள்ளோம். அந்நரகத்தின் ஜுவாலைகள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். (18:29)

ஆணாயினும் பெண்ணாயினும் விசுவாசத்தை (இஸ்லாத்தை) ஏற்றுக் கொள்வது அவரவர் சொந்தத் தேர்வுக்கு விடப் பட்டுள்ளது என்பதால், “அக்கிரமக் காரர்களுக்கு நாம் நரகத்தைத்தான் சித்தப் படுத்தியுள்ளோம்" என்ற வார்த்தைகள் இறைவன் மட்டுமே அவர் களைத் தண்டிக்கக் கூடியவர் என்பதையும் இவ்வசனம் தெளிவாக் குகின்றது.

உண்மையான இறை விசுவாசிகள் தாங்கள் மற்ற மனிதர்களை அணுகும் முறை பற்றி இங்கு தெளிவாக்கப்பட்டிருக் கின்றது. வல்ல அல்லாஹ் இறை வார்த்தை களின்படி இஸ்லாத் தின்பால் மக்களை அழைக்க ஒவ்வொரு விசுவாசிக்கும் போதுமான மன உறுதியை அருள்வாராக.

★

# இறைவனின் தீர்ப்பு

## புதிய நினைவூட்டல் ஆசிரியர், அவரது உறவினர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தி படுகாயப்படுத்திய சகோதரர்கள், தூண்டியவர்கள், ஆதரித்தவர்கள் சிந்தனைக்கு:

1. மறுமையில் இறைவன் தீர்ப்பு வழங்குவார் என்று நம்புகிறீர்களா?

2. உங்களில் யாருக்கேனும் தனிப்பட்ட முறையில் அவர்கள் விரோதிகள் இல்லையல்லவா?

3. நிராயுதபாணிகளாக மனைவி குழந்தைகளுடன் வீட்டில் இருந்தவர்களை கொலை செய்ய முயன்று படுகாயப்படுத்தியது அல்லாஹ்வும், தூதரும் காட்டித்தந்த போர் முறையா?

4. குர்ஆனில் எங்கேனும் இதற்கான ஆதாரம் கொடுக்கப் பட்டுள்ளதா?

5. குர்ஆனுக்கு முரணாகவோ அதில் இல்லாத ஒன்றையோ அவர்கள் கூறினார்களா?

6. யாருக்கும் தெரியாமல் தாக்குதல் நடத்தி விட்டோம் என்று மகிழ்ச்சியில் இருக்கும் நீங்கள் இறைவன் பார்த்துக் கொண்டிருப்பார், மறுமையில் இதற்காக தண்டிக்கப்படுவோம், நரகத்தில் தள்ளப்படலாம் என்று அச்சம் கொள்ளவில்லையா?

7. அல்லாஹ்வை மட்டும் வணங்க வேண்டும். குர்ஆனை மட்டும் பின்பற்ற வேண்டும் என்பவர்கள் மீது சைத்தான்தான் கோபம் கொள்வான்.

8. தர்கா வழிபாடு, தரீக்கா வழிபாடு மற்றும் கடவுள் மறுப்புக் கொள்கையில் உள்ள முகம்மதியர்கள், 5 நேரத்தொழுகை, ஸக்காத்து, நோன்பு போன்ற எந்தக கடமையும் செய்யாதவர்கள். குர்ஆனைவிட தஃலீம் புத்தகம் படிப்பது சிறந்தது என்றும் உலக குடும்ப கடமைகளை உதறிவிட்டு ஓடி சுகம் அனுபவிக்கும் தப்லீக்காரார்கள். அலிக்கு ஈமான் கொண்ட 'ஷியாக்காரார்கள் இத்தகையோர் மீது உங்கள் நிலை என்ன?

9. சாந்தியும், சமாதானமும் கொண்ட நடுநிலையான சமூகம் என்று இறைவன் கூறியிருக்க உங்களுக்கு தீவிரவாதத்தை போதித்தது யார்? இதற்குக் கூலி நரகம் என்பதை அறிவீர்களா?

10. இஸ்லாத்திற்காக போர் செய்வது என்பது இறை நம்பிக்கையற்றவர்கள், முஸ்லீம்கள் மீது போரிட்டால் எதிர்த்துப் போர் புரிவதுதான்.மாறாக மனிதர்கள் மீது

அறுவாளால், வெடிகுண்டுகளால் தாக்குவதல்ல என்பதை அறிவீர்களா?

11. உங்களை தீவிரவாதத்திற்கு ஊக்கப்படுத்திய தலைவர்கள் நாளை மறுமையில் நரகில் இருந்து உங்களைக் காப்பாற்றுவார்களா?

12. இறைவன் தீர்ப்பு வழங்குவார் என்பதில் அவநம்பிக்கைப்பட்டு நீங்களே தீர்ப்பு வழங்க துணிந்தீர்களா?

13. அறிவுடையோருக்கும், சிந்திக்கக கூடியவர்களுக்கும் இது நேர்வழி காட்டும் என்று குர்ஆன் கூறுகிறது. குர்ஆனை மட்டும் கொண்டு வெளியிடப்படும் புதிய நினைவூட்டல் பத்திரிக்கையை புரட்டிக்கூடப் பார்க்காமல் புறக்கணிக்கவும், அதன்மீது தாக்குதல் நடத்தவும் உங்களை தூண்டி உங்களது அறிவையும் சிந்தனையையும் கெடுத்து நேர் வழிக்குப் பதிலாக தீய வழியைக் காட்டியது எது? யார்?

14. இஸ்லாத்தில் இறை நம்பிக்கைகும், அறிவுக்கும் தான் வேலை. உணர்வுபூர்வமாக எதையும் முடிவெடுக்கக் கூடாது. இஸ்லாத்தில் நிற உணர்வு, மொழி உணர்வு, ஜாதி உணர்வு, மத உணர்வு, பாச உணர்வு இன்னும் தனிநபர் மற்றும் தலைவர் கூறுவது சரி என்ற உணர்வு போன்ற எந்த உணர்வுகளுக்கும் இடமில்லை. அறிவைமழுங்கச்செய்து உணர் வைத் தூண்டுபவன் சைத்தான். வேதத்தை அறிவு கொண்டு சிந்தித்து நேர்வழியில் நடக்க முயற்சிப்பீர்களா?

15. நிராகரிப்போரையும், இணைவைப்போரையும் கூட தண்டிக்க இறைவன் யாருக்கும் அதிகாரம் கொடுக்கவில்லை. அவர்களுக்கான தீர்ப்பும் தண்டனையும் நம்மிடமே இருக்கிறது என்கின்ற இறைவசனம் (3:127-129) தெரியாதா உங்களுக்கு?

16. அழகிய முறையில் தர்க்கம் செய்யுங்கள் என்று குர்ஆன் கூறுகிறது. (16:125) அதற்கொப்ப தர்க்கம் செய்ய பதில் விளக்கமும் போதுமான ஆதாரங்களும் இல்லையா உங்களிடம்?

17. நெஞ்சில் துணிவும், பதிலடி கொடுக்கும் ஆற்றலும் உண்டுதான். ஆனால் உணர்ச்சி வசப்பட்டு வரம்புமீறி நரகம் செல்ல நாம் தயாராக இல்லை. தவறிழைத் தவர்களுக்கு இறைவன் இம்மையில் சட்டப்படியான தண்டனையையும் மறுமையில் தீர்ப்பும் வழங்குவார் என்று நம்புகிறோம்.

18. உண்மையும், நியாயமும் இருக்கும் பக்கம் அல்லாஹ்வின் உதவி இருக்கிறது. உங்களுக்கு உதவப்போவது யார்? மன்னிக்கவும் தண்டிக்கவும் அல்லாஹ் போதுமானவர். ★

(முன் அட்டை தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| g. | இஸ்லாத்தின் முதல் தூணான ஷஹாதத்தில் நபி பெயரைச் சேர்த்தது. | 3:18; 37-35; 39 45 |
| 9. | முஹம்மது நபியை ஒரு கொடுமையான மனிதராக சித்தரித்து இழிவு செய்வது: | |
| a. | மனிதர்களின் கண்களை நோண்டி எடுக்குமாறு தண்டனை விதித்ததாக கூறுகிறார்கள். | 3:159; 68:4 |
| b. | முப்பது ஆண்களின் ஆண்மையை அவர் பெற்றிருந்ததாக கூறுவது. | 18:110; 25:20 |
| 10. | ஈசா நபி திரும்பி வருவார் என் போதித்து முஹம்மது இறுதி நபி என்ற உண்மையை செல்லாமலாக்குவது. இதன் மூலம் ஈசாதான் இறுதி நபி ஆகிறார். | 33:40 |
| 11. | ஏராளமான தடைகள் கொண்ட வழக்கத்தில் இல்லாத உணவு கட்டுபாட்டு முறை | 6:145-150; 16:115-116 |
| 12. | புனித மாதங்களை முன்பின்னாக்குவது | 9:37 |
| 13. | கடமையான தர்மத்தை (ஜக்காத்) சிதைத்து அதைப் புறக்கணிப்பது | 6:141; பின் இணைப்பு -15 |
| 14. | பெண்களை அடக்குமுறை செய்து அவர்கள் தலையை மூடவேண்டும் என்றும், பொருத்தமில்லாத உடைகளை அணியச் சொல்வதும் அவர்களுக்கு திருமணம், விவாகரத்து, சொத்துரிமை போன்றவற்றில் அவர்களுடைய உரிமையை மறுப்பது. | 3:195; 4:19, 32; 9:71; 2:228 |
| 15. | ஒரு குரங்கோ, ஒரு நாயோ, ஒரு பெண்ணோ தொழுபவன் முன் சென்றால் அத்தொழுகை செல்லாததாகிவிடும் (ஹதீஸ்) என்று கூறி பெண்களை இழிவு செய்வது. | |
| 16. | தொழுகை முதல், தூங்குவது, நகம் வெட்டுவது வரை ஏராளமான சட்டங்களை உண்டாக்கியது. | 5:101; 42; 21; 2:67-71 |
| 17. | தங்கத்தையும், பட்டையும் ஆண்களுக்கு தடுத்தது. | 5:48-49; 7:31-32; 3:14 |
| 18. | கலை வடிவங்களையும், இசையையும் தடுத்தது. | 7:32; 34:13; 42:21 |
| 19. | ஒரு திமிங்கிலத்தின் மீது பூமி கட்டப்பட்டிருப்பதாக கூறி இஸ்லாத்தை நகைப்புக்கிடமாக்குவது (79:30; இப்னு கஸீர், கி.பி. 1200, பென்பாஜ் கி.பி. 1975) | |

முஸ்லிம்கள் அன்றாடம் செய்யும் வரம்பு மீறல்களுக்கு இவை ஒரு சில உதாரணங்களே ஆகும்.
எனவேதான் இறைவன் மெய்ப்பிக்கும் தூதரை அனுப்பி வைத்திருக்கிறார்.

அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கி ணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங் களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக் குள்ளேயே கொண்டதாக இருக் கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள் ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணி தல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

ஓர் உலகம்
ஓர்-இறை
ஒரே செய்தி

Book - Post

To

*If undelivered Please return to*

புதிய நினைவூட்டல்

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662